உ

கடவுள் துணை.

ஸ்ரீ தண்டாயுதபாணி துணை.

OFFICE OF THE REGISTRAR
17 NOV 1915
MADRAS

கீதாமிர்தசாரம்.

இதில் ஸ்ரீமத் பழனிமாமலையி லெழுந்தருளிய சிவசுப்பிரமணியக் கடவுள்பேரிற் பற்பல பஜனைக் கீர்த்தனங்களும் மதுராபுரி மீனாட்சியம்மன்பேரிற் சில பஜனை கீர்த்தனங்களும் ஜாவளிகளும் அடங்கியிருக்கின்றன.

ஷை பழனிஸ்தலத்தில் வசிக்கும் ம-ா-ா-ஸ்ரீ,

மு-மாம்பழக்கவிச்சிங்கநாவலர்.

அவர்களா லியற்றப்பட்டு,

இஃது,

மணிமங்கலம்,

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

585
4.15

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

பி. நா. சி. கடைகாரியம்.

மு கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

பிடாரித்தாங்கல்:

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை:

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1915.

சென்னை பிரம்பூர் குயப்பேட்டை 65-வது-நெம்பர் வீடு.

உ

கணபதிதுணை.

புதிதாய் அச்சிட்ட

வள்ளியம்மை சுயம்வரம்.

இஃது வள்ளியம்மை மான்வயிற்றிற் செனித்து குரவர்க்கரசனாகிய நம்பிராசன் கிரகத்தில் வளர்ந்து கன்னிப்பருவங்கழித்து தக்க பருவதிசையடைந்து வனஞ்சென்று செந்தினைக்கிளைப் பக்ஷிஜாதிகள் கொய்யாது காவல்புரிந்து நாரதமாமுனிவரோடு வாதுகூறிச்சுப்மண்ய வேடுவனோடு வாதுபேசிப் பண்டாரக்கிழவனோடு மனமகிழ்ந்து பரண்மீதிருந்து அன்னவருக்குத் தொண்டுசெய்து சுனையையடுத்து யானையாற் சிவசுப்பிரமணியரை காந்தர்வமணம்புரிந்து தினைகதிரறுத்து அண்ணமார்களோடு சிற்றூர் சென்று குகனை நினைந்துக் சோதித்துப் பின்னர்ச் சிவசுப்பிரமணியரைப் பாணிக்கிரகணஞ் செய்து திருப்பரங்குன்றஞ் செல்லுதல். இப்பாக்களில் சாஸ்திரயுக்தப்படி நவரசங்களாலும் இந்துஸ்தான், பார்ஸீ, கெஜல், டோமரி, துக்கடா, சிந்து, கீர்த்தனை, கலிப்பா, வெண்பா, விருத்தப்பா, ஓரடிப்பதம் முதலிய வர்ணமெட்டுகளினாலியற்றப்பெற்று நல்ல கிளேஸ் கடிதத்தில் ஆங்காங்கு ஐதீகப்படங்களமைத்து அச்சிட்டுத் தயாராகயிருப்பதாலும் காப்பி சொற்பமாய் அச்சிட்டிருக்கிறபடியாலும் வேண்டுவோர் எமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணா 0 12 0

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

☞ பி. நா. சிதம்பரமுதலியார்.

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,

மதராஸ்.

148235

1224

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 NOV 1915
MADRAS.

ஸ்ரீ தண்டபாணி துணை.

கீதாமிர்தசாரம்.

தொடையம்.

க-இராகம்-ஜலநாட்டை-தாளம்-ஜம்பை.

கண்ணிகள்.

க. பரமகுருதேசிகனைப் பழனிமலைவாழ்குகனைச்
சரவணசதாசுதனைச் சண்முகனைப்பாட ஆ ஆ
வரமதுதந்தருள்பரனை மங்களகணேஸ்வரனை
யாவணியங்குசதரனை யைங்கரனைத்தொழுவாம்ஜெயஜெய

உ. சருவபரிபூரணனைத் தளபநீபதாரணனைக்
கருவதுஜவாரணனைக் காரணனைப்பாட ஆ ஆ
திருமுடியின்மேன்மதியைச் சேர்த்தியவுமாபதியைத்
தருமகருணாநிதியைச் சரஸ்வதியைப்பணிவாய்ஜெயஜெய

ந. மகிமைபலபூண்டவனை மறைதேடநீண்டவனை
யகிலமகிழ்ந்தாண்டவனை யாண்டவனைப்பாட ஆ ஆ
பகலினெழுகதிர்வெயிலும் பழுதுபடவோபயிலும்
புகலரியவவனையிலும் புகழ்மயிலுந்துணையே ஜெயஜெய

௪. நயகுணகங்காசுதனை நளினபதசோபிதனைப்
புயபலதண்டாயுதனைப் பூஜிதனைப்பாட ஆ ஆ
மயலைமதனிடுபோரை மமதையைவென்றுளபேரை
நியமமதவடியாரை நினைவோரைநினைவாம ஜெய ஜெய

மங்களம்.

உ-இ-ம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சிவசுப்ரமண்யாதேவாவுனக்கு
ஜெயசுபமங்களம்

அநுபல்லவி.

தவவிப்ரஜன சங்கனிறையுந்
தமிழ்தனபழனித் தலத்துள்ளுறையுஞ் சிவசுப்ர

சரணங்கள்.

தருமமனைத்துத் தவறவிடுத்த
தாரகாதி வீரர்தொடுத்த
வருமமழித்து வணங்கியடுத்த
வாசவனுக்கு மகுடங்கொடுத்த சிவசுப்ர

உரியபெயரொன்றேறுநின்ற
வொருகன்னிகை நெஞ்சுளைவுகுன்ற
வரிசைநடன வகைசெய்கின்ற
மயிலிலவள் மகிழ்ந்துசென்ற சிவசுப்ர

ஆரக்கடம்பு மலர்பைங்குரவு
மணிகுங்குமமு மழகுவிரவும்
பாரப்புயகண் பாரென்றிரவும்
பகலுமாம்பழம் பாடிப்பரவுஞ் சிவசுப்ர

இதுவுமது.

ங-இராகம்-ஆகிரி-தாளம்-ஆதி.

பல்லவி.

சாமிநாதாவுனக்குச்சந்ததமுமங்களம்
பூமிஸ்வர்க்காதிலோக பூஜிதானந்தயோக சாமிநா
சகலகலாவிற்பன்ன தண்டாயுதப்ரசன்ன சாமிநா
சுகாதிவ்யாலங்கார சிவசயிலகுமார சாமிநா
வரதெய்வயானை வள்ளிசமேதஞான சாமிநா
பரவியருள்கைகூடும்படி மாம்பழங்கொண்டாடுஞ் சாமிநா

உ

சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 NOV 1915
MADRAS.

கணபதிஸ்தோத்திரம்.

வனஜாசன-வினுதாரூத-வரதாகிய-ஸ்ரீலளித

என்றக்ருத்திகையின் வர்னமெட்டு.

சுஸ்திரீராகம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சுரவந்தித வரகுஞ்சரசுமுகாகருணாநயன

அநுபல்லவி.

சரணம்சரணரம்ப்ரணவசுந்
தரசம்ப்ரம சஞ்சிதபவ
ஹரங்கண புங்கவசிவ — சுரவந்

சரணங்கள்.

வேதாகமவ — தீதாவிகட
பூதாதிபலம் — போதரா
கீதாமிர்தசசிசேகரஸ்ரீ
திடசத்குண-சிற்சுகபத்
தடவிக்ரமமஸ்-தகவத — சுரவந்

சீலாமவுன — லோலாசவுரி
பாலாமிருதசு — பாஷிதா

காலாதிமத்யாந்தர ஹிதஸ்ரீ
சுரபங்-கஜவங்-குசதர
சுரரஞ் சிதபங் தவ்வுர   சுரவங்
தீராகனச   தீராஜெகவுத்
தாராசதுர்ப்பு   ஜாசலா
வீராகவிசிம்ஹவிநுதஸ்ரீ
விபவப்-ரபலா-வதிவித
கபவுத்-தமவா-னதிசுக   சுரவங்

இதுவுமது.

ரு-இராகம்-ஸஹாணு-தாளம்-ஆதி.

பல்லவி.

ஜெயஜெயலமபோதரா
ஸ்ரீசந்த்ரஜடா தரோ

அநுபல்லவி.

நயசுதா-மயகதா
ஞானஜன ஹிர்தயத்
பானபதவுபய   ஜெயஜெய

சரணங்கள்.

நிகிலஜெகத்காரணு   நிமலாபரிபூரணு
நிஜசுகா   கெஜமுகா
நீதவற்புதகுண   நாவிதற்பணகுண ஜெயஜெய
பாசபவமோகனு   பங்கஜத்ரிலோசனு
பராபரா   நிராதரா
பஞ்சகரமதுர   புஞ்சசரித்திர ஜெயஜெய
கற்பகவிநாயகா   கவிசிம்ஹசுதாயகா
கனபுரா   தினவரா
சகனசுரவிநுத   பகவகவுரிசுத ஜெயஜெய

பரமசிவஸ்தோத்திரம்.

சு-இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாகிபரமாபதித்தயாளா
பன்னகேந்த்ரரத்னாபரணா-மாம்

அநுபல்லவி.

யோகீஸ்வரநுத தயாகிசுசரித
வோங்கார-நிவாசாதி கிரீசா பாகிபரமா

சரணங்கள்.

நீலகிரீபக பாலத்ரிசூல
காலஜெயசுசீலா
கோலகாமதஹன பாலலோசனாமன
கோகனகவிசாலா குணாளா பாகிபரமா

வேததபோதன தேவவினோதா
சிதவனஜபாதா
பூதகணசகித நாதபவரகித
புண்யதுரியாதீதா அபேதா பாகிபரமா

சந்த்ரஜடாதர சுந்தரவாகா
மந்த்ரகல்யாணிபாகா
கந்தர்வாதிபசுர வந்திதசிவாவா
சவிசிமஹசுதேகா நிர்மோகா பாகிபரமா

உ

சிவமயம்.

பெரியநாயகிஸ்தோத்திரம்.

எ-இ-ம்-பந்துவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாராமுகமேனம்மா இன்னமுஞ்சும்மா
பாராமுகமேனம்மா

அநுபல்லவி.

நேராமுனிவரிமை யோராதியர்பரவு
சீராலுயர்பழனி யூராள்ப்ரஹாநாயகி
தெருளுருபலகலை சேர்ந்ததொண்டர்த
மிருள்செறிபழவினை தீர்ந்திடும்படி
தெரிவருமுபயப தாம்புயனை
பரிபுரநவமணி சூழ்ந்தகிண்கிணி
திரிகுகுதகணந தரிகிடதணசெணு
திமிதகவெனவொலி ஜெயமுனமழகிய
சிற்சபைநடுவினி தற்புதநடமிடு
சிற்பரரெனுமொழி கற்பகமருவிய

தேனேயன்புசிறந்த மானேசிந்தைதுணிந்து
தேனேயுன்றனைநம்பி னேனேசந்ததமிந்தப் பாரா

சரணங்கள்.

வாணிமலராழக வேணிமதுராச
கேணிநிர்விஷயபு ராணிபணவுரத
பூணிமவுனந்த கோணிகதியுதவு
காணிபத்தைதகருத் ராணிநித்யகல்யாணி
கனிதருமழை சான்றகுஞ்சர
முக்கணைபதியையு நேர்ந்துபொங்கிய
கயவுடையசுரர்க்கு மூரங்கலங்கிட
வயனில்விடுகுகணையு மீன்றசம்பர
கமலைதிகம்பரி யமலைபுரீந்தரி
கவுரிபரம்பரை பைரவியம்பிகை
காரணிதிரிபுரை நாரணிசுகபரி
பூரணமதிநுத லாரணியுமைசிவ
காமிகுறவனிதை மாமிசரவவயி
சாமிவடிமைகொள நேமிசமயமிது பாரா

வீரியுசிதகவு மாரிகுயின்மொழிவிஸ்
தாரிபிரணவோங் காரிமயிடகோப
சூரிசக்ரதாமு ராரிசோதரியின்ப
வாரிபஞ்சாக்ஷரவ கோரிஜெயகெம்பீரி
மரகதநிறவொளி வாய்ந்தபைங்கிளி
திரள்கெடமதன்முடு கோங்கரும்பொடு
வடதடகிரிசிமில் பூங்குரும்பையு
மிணையலவெனவிரு மாந்துதிண்பரி
மளமிகுகுங்கும களவமணைந்தின
வடமுமணிந்தலை கடலமுதந்தனை
வைத்துளபொற்கல சந்தைநிகர்த்தும்
தர்த்தடாவட்டவி சித்ரனத்தெழின்
மாதேதொழுமேனியன் மீதேவரும்நினை
யாதேநினைவதுதகாதேசொன்னே னிப்போதே
சீவிகிரணதிரி சூலிக்காலக
பாலிவிளைதரும் வேலிகனசுகிர்த

நீலிசரவதநு கூலியதிகபாக்ய
சாலிநயசிலாதயு லோலிதிவ்யகுணலி
ததமதிவலரூற வார்சரியம்பகி
சுவைபெருகியகவி மாம்பழம்பகர்
தருதமிழினின்மகிழ் கூர்ந்தசுந்தரி
பொருதிறலடல்தனை யேர்ந்தவந்தரி
சாமனைகுண்டலி கோமளசண்டிகை
தாமதுரந்தரி நேமசுமங்களை
சங்கரியிங்கித வங்கசடங்கிம
தங்கியிணங்குல கொங்குமிலங்கிய
தாயேதுணைபலவு நீயேயினிக்ருபை
யர்யேவரமுதவு வாயேயேழைமீதினிங்-பாரா

விஷ்ணுதோத்திரம்.

அ-இ-ம்-மோஹனகல்யாணி-தாளம்சாப்பு

பல்லவி.

ராமாபராமுகமாமா எனை
ரட்சிசமயமுதரவிகுலசோமா

அநுபல்லவி.

காமாதிமாயாவி காரப்ரபஞ்சங்
கடப்பதெப்படியென்று கலங்குதேநெஞ்சம்-ராம

அகன்று அகலிகையும்பெண் ணாக்கியபாதம்
இன்றுநல்கினலதி லென்னவிரோதம்-ராமாய

தந்தைதாய்குருதெய்வஞ் சகலமுநீயே
சிந்தைதேறவுபாயஞ் செய்தருள்வாயே-ராமாய

புவியிலினையலது புகலுண்டோதானுங்
கவியின்மகிழ்வுகூர்ந்தென் கலிதீர்க்கவேணும்-ராமாய

ப்யவுபுரிமாம்பழந் தமிழலங்காரா
நயகுண தசரத ராஜகுமாரா-ராமாய

சரஸ்வதிஸ்தோத்திரம்.

——()——

சூ-இராகம்-ஆனந்தபைரவி-தாளம்ஆதி.

பல்லவி.

வாணிசரணஞ்சரணம்-வேதபுஸ்தக
பாணிசரணஞ்சரணம்

அநுபல்லவி.

ஆணிமுத்துநிறைத்த பூணிபுஷ்பவிசித்ர
வேணிநித்யவருன்கல் யாணிமுத்தமிழ்வித்யா-வாணி

சரணங்கள்.

வேதாமுகத்தினிலுற்றாய் சகலலோக
மாதாவெனப்பெயர்பெற்றாய்
ஆதாரமத்தனையு நீதான்மயக்கமதி
லேதாருனக்குநிகர் கீதாமிர்தப்ரபல வாணி

சொந்தமொடுபலதுதி செய்யவென்னுவில்.
வந்தஜெயசரஸ்வதி
சந்தமது பகர மந்தவிகசிதசு
கந்ததவளவர விந்தமதுர வாணி

பக்கமதனைவிலக்கி திவ்யகவிப்ர
சங்கமகிமைதுலக்கி
பொங்கவுனதியவி ணங்கவரமுதவுந்
துங்கமாம்பழக்கவிச் சிங்கந்தனைரட்சிக்கும் வாணி

கீர்த்தனங்கள்.

ராம்ராம்ராம் சீதாராம் ராம்ராம்

என்றபேராவினவர்னமெட்டு.

சு-இரா-மோஹனகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

காப்பாயேமுருகாநீயே

அநுபல்லவி.

தீப்பாதவினைதன்னைத் தீர்த்துத்திருத்திப்பின்னைப்
பூப்பாதநல்கியன்னை போலென்னைக்-காப்பா

சாலவருணர்நொந்து சாய்ந்துசிந்திடமுந்து
நீலமயிலுகந்து நேர்வந்து-காப்பா

மாசிற்புவியைவானை பயக்குமன்மதசேனை
யாசைக்கிடங்கில்யானை யானேனைக்-காப்பா

மாவினைதவிஸ்தாரா மாம்பழந்துதிவீரா
தேவியுமைகுமாரா செந்தூரா-காப்பா

ராமாராமாராமாரவிகுலசோமாபீமாஸ்ரீதஜனகாமா.

என்றகீர்த்தனையின்வர்னமெட்டு.

உ-இராகம்காப்பி தாளம்-ஆதி.

பல்லவி.

நாதாநீதாதாதாதாக்ருபையின்னம்
வாதாரூதாமனமிரங்காதா

அநுபல்லவி.

ஆதாரமுனைய லாதாரினியருள்
வேதாமவுனவி நோதாசிவகிரி-நாதா

நேமாகமகுண பூமாவினைதொடர்
காமாதியில்விட லாமாநிதமெனை-நாதா

தீராநடனம யூராசுரப
காராவசுரசம் ஹாராசரவணீளர்தா

சுகபாதாம்புய குகதேன்கூர்தமிழ்
பகர்சீர்மாம்பழ மிகவேதான்றெழும்-நாதா

பஜனமேரேசாபரேமானுபஜனமேரேசாயரே

என்றஇந்துஸ்தானியின்வர்னமெட்டு.

பல்லவி.

ஆதரித்தெனையினியாண்டருள்வாயே
அசட்டைசெய்வதுநீதியலநீயே ஆதரித்

அநுபல்லவி.

மாதவத்தவரும் பூதலத்தெவரும்
வழுத்தும்பழனிமலை வடிவேலா
சாதனைத்தொழிலேனோ சோதனைக்கெதிர்நானோ
சரசவள்ளிதெய்வகுஞ் சரிலோலா ஆதரித்

கனவினுந்தாவி மனமெனும்பாவி
கலங்குவதுகொஞ்சமோ கணைதொல்லை
வனஜமும்பெருமாத வுனதுரஞ்சித
வணக்கத்துக்கிணக்கமாய் வருதில்லை ஆதரித்

தடியரைநாடி வடிதமிழ்பாடி
ச்ஞ்சலத்தாலுத்த தளர்வொன்றோ
கடினமதுநின்சொந்த வடிமைசகியேனெந்தக்
காலமுமுனக்கடைக் கமலன்றோ ஆதரித்

வாக்கினிலடுத்துப் பாக்கியங்கொடுத்து
மாம்பழக்கவிச்சிங்க மதிதேற்றிக்

காக்குமறுமுகவா நீக்குவதுதவா
கமைஜென்மசமுத்ரக் கரையேற்று ஆதரித்

ச-இராகம்-மோஹனகல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்முகம்பார்த்தருளையா-நான்
ஏழையுனடிக்கடிமையென்பதுபொய்யா

அநுபல்லவி.

வன்மமென்னபழனி மலைமுருகோனே
வகைபொன்றுந்தெரியாமல் வாடுகின்றேனே-என்முக

சண்டாளனிவனென்று தள்ளாதேயென்னைத்
தெண்டாயுதாநீயன்றித் திக்குண்டோபின்னை-என்முக

தவறெத்தனைசெய்திருந் தாலுமிங்குயுனே
தயைமுற்றுமனம்பொறுத் தாள்வதுன்கடனே-என்முகம்

வருத்துதேசயடிக்கடி மாயாவிகாரந்
திருத்தியூழ்வினைவலி தீர்த்திந்தநேரம்-என்முக

ஒன்றுவிரண்டாசும்மா வோயாததுன்பம்
மென்றுவினியெந்தநா ளெய்துவதின்பம்-என்முக

மாம்பழந்தமிழ்புனை வள்ளிசமேதா
பூம்பதந்தொழுநெறி புகலலாகாதா-என்முக

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாதுகாக்கவேணுமையா
பழனிமலைத்தண்டாயுதக்கையா

அநுபல்லவி.

போதுமெளியேன்மேல் வாதுதுயர்தனைப்
போக்கியுனக்கேயா ளாக்கினியெனைப்-பாதுகா

சரணங்கள்.

ஆசைவிகாரப்ப சாசைநின்னெழுத்
தாகியமந்திரத்தாலே யோட்டி
யப்பாலெப்போதுமதுதொடாவகை
பன்பேந்திசத்தைமென்மேலே
பூசைமுறையொடுபூட்டி ஞான
பூமாறகையுங்கூட்டி மெள்ள

மாசைவநன்னெறி வாய்வுதனிலுய்த்து
மற்றொன்றினாலு மயங்காமலேவைத்துப்-பாது

ஜென்மமரணத்தற் கன்மத்தையெண்ணித்
திகைக்குதடிசிந்தை யுனைச்
செந்தமிழால்வாழ்த்தியுமிகக்கலக்கந்
திருந்தாவிடில்வருநிந்தை
நின்மலர்ப்பாதமேதஞ்சம் சாற்றும்
நீசெய்யலாகுமோவஞ்சம் இது
தன்மமல்லப்பெற்ற தாயேபிள்ளைமுகந்
தான்பார்த்திடாதிருக தாலென்சொலுஞ்செகம்-பாதுகா

மீனவனுக்குமுன் கூனல்வெங்காந்தல்
விலக்கியவேதவினோதா சொர்ன
விம்பமெனவளர்கும்பப்பரிமள
மென்முலைவள்ளிசமேதா
வானவர்தம்பெருமானே கவி
மாம்பழத்துக்கருள்வோனே பல
தானவருத்தத் தளிக்கும்படிசென்று
தாக்கியவேலா தருணமஞ்சேலென்று-பாதுகா

சு-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாவாவாபொன்-மயூரமீதேறியென்முன்

அநுபல்லவி.

தேவாதேவாபழனித்-தெண்டாயுதபாணியென்முன் வாவா

சரணங்கள்.

நன்னிலைகாணுதலைந்த நான்மிகவுமட்டி
யென்னைநீயாளொண்ணுதா
வென்னைவினியட்டி யென்முன்-வாவா

பாதவர்ச்சனைசெய்யாத பாவியேனுனாலும்
ஆதரிக்கவேணுந்தவ
ரூதேயொருக்காலு மென்முன்-வாவா

எத்தனைசொன்னாலுநெஞ் சிரக்கமேயிராதா
சித்சுநிர்விஷயசிற்
சொரூபானந்தபோதா என்முன்-வாவா

தஞ்சமுனையன்றியில்லைத் தாமதமேனப்பா
அஞ்சலெனறிடலாகாதா
வத்தனைவெறுப்பா என்முன்-வாவா

வள்ளிதெய்வானைவிரு தண்டுநுகர்த்தேனே
தெள்ளியசுகிமாம்பழந்
தியானிக்கும்பெம்மானே என்முன்-வாவா

எ-இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

நம்பினேனுன்பதமே-பழனிபுரிவேலாநிதமே.

அநுபல்லவி.

எம்பிரானீ நானடிமை

சரணங்கள்.

ஆதாரமில்லாதபட்சி யாமெனவலைந்துருட்சி
வாராமையாலுலோகபட்சி வஞ்சமைக்கெஞ்சாதுரட்சி ந

துன்பமனத்தின்விருத்தி சொல்லொணாதருள்பொருத்தி
யன்பரினத்தேயிருத்தி யாள்வதல்லவோதிருத்தி ந

வள்ளிமாமயில்விசாகா பூரணானந்தப்ரவாகா
வள்ளிதெய்வானைமோகா மாம்பழம்போற்றும்வைபோகா ந

அ-இதுவுமந்தவர்ணமெட்டு.

பல்லவி.

அஞ்சலென்றிங்குடனே-யெனை
யாண்டுகொள்வதுன்கடனே

அநுபல்லவி.

செஞ்சரணநம்பினேனேன்
தென்பழனியெம்பிரானே அஞ்ச

சரணங்கள்.

என்பழனிவினைகள்போக்கி யின்னுயிர்த்தூளாக்கி
துன்பசமயத்தைநோக்கிச் சோரவிடாமற்கைதூக்கி-அஞ்ச

தொண்டரினத்தோடுகூட்டி சுத்தமெய்ஞ்ஞானத்தைகாட்டி
சண்டனைவராமலோட்டி சண்முகாநின்சேவைகாட்டி-அஞ்ச

வேறுவிதவாசைதங்கி வேலவாவறிவுமங்கி
மாறுமுன்கிருபைபொங்கி மாம்பழமணந்திணங்கி-அஞ்ச

கூ-இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

பரப்ரம்மசொரூபாசரணம்-பற்
பலபுவனமுநிறைபரப்ரம்ம

மருக்குலாவிய திருப்பழனிநகர் வாழ்கின்றசின்
மயசரவணபவ நயகுருபரசிவ-பரப்ரம்ம
பாரபுளகிதப டையபுயவமிர்த
பாகசுகுணதீப யம
பாசவிபரிதவி நாசமதடிகடின
பாபதுரிதிகோபா
கோமாகலகரண-சூராதலவிஜைய கோலாகலா
கொங்காகுகவணி துங்காமறைமணி-பரப்ரம்ம
நாதபரிபுரவி நோதபரவித
நடவதிடமயூரா சுக
ஞானப்ரணவவடி வானகவுரிதரு
நாகநீக்குமாரா
சீதநளநளினபரதயுகளகுகதேவாமகா
சித்தர்க்குயர்தரு முத்தர்க்கெதிர்வரு-பரப்ரம்ம
வாலகிரணரவி போலவொளிர்கனக
மகுடமவுனயோகா புண
வாசகனதனவி லாகசரஸகுற
வனிதைமருவுமோகா
சீலமதாகவெந்நாளுமாம்பழக்கவிச் சிங்கப்புகத்
திடவரமதுபரி வுடனினிதருள்புரி-பரப்ரம்ம

ய-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சற்றேதயவுசெய்யோணுதா
சாமிசண்முகாவென்மேல்வாதா

அநுபல்லவி.

முற்றுமுனை நற்றுணையென்
முற்றனன்யான் மற்றறியேன்-சற்றே

சரணங்கள்.

சற்கதியுடையதெய்வ நீயே
சந்தேகிக்கவேன் சுழித்தாயே
புத்திவிசா ரந்தினுன்மூழ்
கித்திரியா தித்தினமே-சற்றே

வெத்தமயக்குதையோமாயை
வெல்வதெதனலந்தப்பேயை
பத்தர்களை முத்தர்கள்பூ
சித்தமகா வுத்தமனே-சற்றே

வரிசையுஜிதவள்ளி பாகா
மாம்பழஞ்சொன் மாலிகைவாதா
அரிமுதலோர் சொரிமலர்க்கோ
விரிபழனி புரிமுருகா-சற்றே

யக-இ-ம்-தேசிகதோடி-தாளம்-ரூபக-கண்ணிகள்.

பல்லவி.

அடிமைநானுன்னடைக்கலமினியாகிலுமென்னையாளையா
கொடிப்பீனனென்றாலுந்திருத்திக்கொள்ளவிதுநந்தானையா அடி
கடினவசுரகுலகண்டனகங்கணசுரதளசேகரா
படிதொருமம்பழனிபுரித்தண்டபாணிஞானதிவாகர அடிமை
நின்பெயரொருதரஞ்சொன்னாலெந்தநீசருமுய்வரல் லவர்
என்பழவினைதீர்கிலாவிதமென்னகுஞ்சரிவல்லவா
அன்பர்க்கெளியனுமென்றுனைக்கொண்டாடுவதுபொய்வழக்கமா
அன்பத்திடைநம்பினரையிழுத்துவதுன்னுடையபழக்கமா அடிமை
மாகலியுதவாதநீயிந்தவஞ்சனைசெய்யலாகுமா
ஆகமமுதல்வாசும்மாவிருந்தாற்பழிவிட்டுப்போகுமா அடிமை
மோகமயவுலோகவலையன்மூழ்கிமனதுபதைக்குதே
வேகமுடனநேகதழியின்மேவியறிவைச்சிதைக்குதே அடிமை
கனவினுந்தெளியனவினும்பலகவலைசுழற்றியாட்டுதே
யுனதுசெஞ்சரணவதுதஞ்சமுண்டோவிருதாவினில்வாட்டுதே அடி
அனுதினங்கவிமாம்பழம்புகழுயிர்தருணநிரஞ்சனா
தனிதையம்பிகைமகிழ்குழந்தையாய்வந்தருள்பவபஞ்சனா அடிமை

யஉ-இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

காப்பதுநின்பாரங் காட்சிதந்தின்னேரங்கா

அநுபல்லவி.

பூப்பதும்பாதந்தன்னைப்
போற்றவுமறியேனென்னைக் காப்பது

ஆவினன்குடியுள்ளானே   ஆறுமாமுகவல்லோனே
கூவியிங்கயர்கின்றேனே   கோரியபடிக்குத்தானே-காப்
மேகம்போற்கறுகறுத்து   மிஞ்சுநமனைச்செறுத்து
சோகந்தீவினைபறுத்துத்   துற்குணமெலாம்பொறுத்து-காப்
புந்தியெத்திசையுஞ்சென்று   புண்படர்வதையிதென்று
மந்திரப்பொருள்புகன்று   மாம்பழந்தனைமுன்னின்று-காப்

௰௩-இராகம்-யமுனாகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

வையாபுரிவாழுமுருகையாகைவிடாதே
வந்தெனையாட்கொள்வாய்நீயிப்போதே

அநுபல்லவி.

பொய்யாசைநீரேன்   பூஜிக்கநேரேன்
மெய்யானதோரேன்   விரைந்துன்னைக்கோரேன்-வையா
வம்பிணக்கோதை   மார்களின்சூதை
நற்பிநற்பாதை   நழுவினுன்பேதை-வையா
ஈங்குமுன்னாலு   மிகழ்ந்தநல்போலுங்
தீங்குமென்மேலுஞ்   செய்திருந்தாலும்-வையா
சுரர்திரள்கூட   தொழுதுகொண்டாட
வரர்தினநாட   மாம்பழம்பாட-வையா

அசருணைநா.

௰௪-இராகம்-சுருட்டி-தாளம்-சாப்பு.

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

பல்லவி.

சுவசுப்ரமண்ய-தேவே-யெங்கோவே
சித்தமிரங்கியருள்செய்யநீவாவே

அநுபல்லவி.

புவனத்தின்மேலே   தவனத்தினாலே
புண்ணியலிங்தேன்காற்றிற்   பூனைப்பூப்போலே - சிவ
தெளிவுறஞ்சென்மங்   களில்வெருகன்மர்
தேடியிருந்தாலுந்தீர்த்   திடுவதுதன்மஞ் - சிவ
மெய்யோபொய்யுருவ   மையோவீண்பருவம்
வினையாதெனைரட்சிக்க   வேயிதுபருவம் - சிவ

வகையறியேன் தகையுடையோன்
மாம்பழங்தொழுங்குற வள்ளிபூமானே - சிவ

௰௫-இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவேளைநீயே-யென்னைரட்சிப்பாயே

அநுபல்லவி.

சந்ததமுனாமன சிந்தனைசெய்தேனே
தாரகப்ரம்மமா முருகோனே - இந்த
பத்திசுத்திபூணேன் சித்திமுத்தியேனேன்
பாவியேனொருவரை யுங்காணேன் - இந்த
எத்தனைவிசார மத்தனைகுரூரம்
ஞ்ஞைசகிப்பேனோ பெரும்பாரம் - இந்த
மங்களகுணாளா வெங்களனுகூலா
மாம்பழம்புகழ்பழ ஸ்வேலா - இந்த

இந்துமுகிவானிகிமனசிந்துலதாயா
என்றஜாவளியின்வர்னமெட்டு.

௰௬-இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தஞ்சமென்றேநம்பினேனல்ல
சந்ததற்பமீதே கைதவறவிடாதே

அநுபல்லவி.

கஞ்சமதனில்தஞ்சவரும்நினைவதுவாகாதெய்வ
குஞ்சரிகுறவஞ்சிதழுவுங்குங்குமதேகாபூங்
கரவமாயோகா தஞ்சமென்றே
விகற்பரூபஜகத்துமயக்கமெத்தப்ரம்மாதம்
லகப்படாமலிகத்தும்பரத்துமானந்தபோதந்
தருள்செய்நின்பாதம் தஞ்சமென்றே
சின்னவயதுதன்னிலுமுதிதேடிலேன்முன்னைநா
மென்னபிசகியிருந்தபோதிலுமேழையாமென்னைநா
ளெந்தையேயுன்னை தஞ்சமென்றே

வாசம்விசுமஹாவரசுரூபா-மல
பாபவிமோசனதாண்டவாணிப்ரதாபா-மாம்
பழகவிலாபா தஞ்சமென்றே

கஎ-இதுவுமந்தவர்னமெட்டு.

பல்லவி.

இந்தமனமென்வசப்படு-தில்லையேசாமி
ஈடேறிடநேமி

அநுபல்லவி.

சந்ததமுமுயர்ந்தமகிமை-சச்சிதானந்தா முதிர்
செந்தமிழ்முனிவந்துதிசெய்-திவ்யப்ரபந்தா னென்
சிவகிரிக்கந்தா இந்தமனம்
க்ரமக்ரோதலோபமோகக்கடலிடைதோயும் மத
மாமச்சரம்விடாமற்சுழன்வான்மூதற்பாயும் வின்
மாயையாலேயும் இந்தமனம்.
நீதவசனசாதுஜனரைநிந்திக்குமுந்தும் பல
மாதர்களின்விநோத வகையைவாஞ்சித்தும்நொந்தும் சன்
மார்க்கத்திற்பிறந்தும் இந்தமனம்
தேம்படிந்ததினைப்பைம்புனத்துத்திகழ்வள்ளிபங்காசின்
மயவகளங்கா இந்தமனம்

கஅ-இ-ம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கண்கள்பனிரண்டுளகுகநாதா-தமியேனையோர்கைக்
கண்ணாகிலும்பார்க்கலாகாதா

அநுபல்லவி.

பண்குயில்பாரும் பழனியிற்றண்ட
பாணியாயல்லும் பகலுங்கடலுண்ட
வண்குறுமாமுனி மற்றுமுயர்ந்தோரண்ட
வாணர்தொழவளர் வாழ்வேயருள்கோதண்ட-கண்கள்
காலமுழுதுங் கயிலையிலேமதி
கலங்கினேவின்பத்தைக் காணுவதெத்ததி
சாலவுன்னற்றிருந் தாதோவயன்விதி
சண்முகசற்குரு சாமிநீரேகெதி-கண்கள்

ஏழைபங்காளனென் — றெங்குழுனைக்கொல்ல
வென்மட்டுஞ்சும்மா — விருப்பதழகல்ல
பாழ்வினைத்தூளாம் — படிசெய்யவேவல்ல
பண்டிதனுன — பழம்பொருளேநல்ல-கண்கள்
மங்களமாக — மகிழ்ந்துகொண்டாடியே
மாம்பழஞ்சொல்கவி — மாலையுஞ்சூடிய
குங்குமமாகா — குறமகள்கூடிய
கோவேகளினக் — குருவெனநீடிய-கண்கள்

சு-இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

உனக்கபயமுனக்கபயம்
உன்னைத்தவிரவேறுண்டோபுகலினி — உனக்கபய

அநுபல்லவி.

மனக்குறைதீர்முனி — வரர்சுரர் — பேணி
வணங்கப்பழனிமலை — வாணுந்தண்டபாணி-உனக்க

சரணங்கள்.

நன்றிதுதீதிது — வென்றினி — தறியேன்
ஞானவழிதனிலே — நடக்கவும் — குறியேன்
அன்றியுமயல்பிடித் — தாடிய — வெறியேன்
ஐயாகைதவறவி — டாதேகாண் — சிறியேன்-உனக்க
பாவதுற்குணங்களைப் — படித்திளங் — காளைப்
பருவமுழுதுங்காற்றிற் — பரக்கின்ற — பூளைப்
பூவெனச்சுழன்றுவீண் — போக்கினேன் — நாளைப்
பொய்யனென்றெனை — தள்ளப்போகா — திந்தவேளை-உனக்க
மலஜெனனமரண — வாதையின் — மேவா
வரங்கொடுப்பதற்கென்முன் — மயின்மிசைவாவா
பலதுதிமாம்பழம் — பகர்குக — தேவா
பக்ஷம்வைத்துக்கடைக்கண் — பார்பஹாறு — பாவா-உனக்க

உய-இராகம்-தந்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

பரமகுமரகுருபரிபுறப்
பதமலர்நினைமனமே

அநுபல்லவி.

தரணிபுகழுமதி தனைமுழுதாங்குந்
தண்பொழிற்சிவகிரி தனில்வளர்ந்தோங்கும்-பரம

சரணங்கள்.

நீரிலெழுகுமுழி நிகரென்றுசொல்ல
நீடியவாழ்வுநன் னிதிநிசமல்ல
சீரியசுவைமுதிர் செழுந்தமிழ்வல்ல
தென்முனிக்கன்றுப தேசிக்குநல்ல-பரம

வெஞ்சினவஞ்சக மிஞ்சியகூர்னம்
விலகிடும்படிபொருள் வெளியெதிர்தோற்றுஞ்
சஞ்சிதமாம்பவ சாகரமாற்றுந்
தயவுபுரிந்துநமைத் தான்கரையேற்றும்-பரம

தெள்ளியவமுதினுந் திருந்துசொல்லான
தெய்வகுஞ்சரிபசுந் தினைவிளைகான
வள்ளிதழுவும்பெரு மானினிகர்ன
மாம்பழக்கவிக்கருள் மவுனமெய்ஞ்ஞான-பரம

தாரகமேநீ-பவந்-தாண்டியேகரையேறு
என்றகீர்த்தனையின்வர்னமெட்டு.

உக-இ-ம்-முகாரி-தாளம்-திரிபுடை.

பல்லவி.

நெஞ்சமேநீநில்லு வினை
வஞ்சகந்தனைவெல்லு பொல்லாத-நெஞ்ச

அநுபல்லவி.

விஞ்சையர்வானே ரஞ்சலிசெய்ய
வீறுமேதாகைமீதே வருங்
குஞ்சரிரமணனெ னுஞ்சரவணசற்
குருபதமறவாதே யிப்போதே-நெஞ்ச

தீதகலாத பாதகரூப
தேகபோகமெய்யா விங்கப்
பூதலவாள் சீதமேகமின்
போலுமென்பதுபொய்யோ ஐயையோ-நெஞ்ச

நேசவுல்லாச வேசையராசை
நிலையெனவேகத்திப் பந்த
பாசமதான மோசவலைதனிற்
படில்வருமோமுத்தி துற்புத்தி-நெஞ்ச

இத்தருணத்தின் மெத்தவுநயமே
நின்பசுகத்தைத்தேடு வளர்
முத்தமிழ்மாம்பழ நித்தமும்போற்றிய
முறுக்கன்புகழைப்பாடு கொண்டாடு-நெஞ்ச

உஉ-இ-ம்-காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்னென்னவிதமாகச்-சொன்னபோதினுமதை
யேன்மறக்கிறுய்மனமே

அநுபல்லவி.

தன்னைநம்பினபேர்க்கு நன்னிலம்புகழ்முத்தி
தருந்தண்டபாணியைத் தினந்துதியெனப்புத்தி-என்னெ

சரணங்கள்.

தெரியமென்முலைகாட்டிச் சிரித்துச்சிரித்துமாயஞ்
செய்யுமாதர்மேலாசை செய்குவதனியாயம்
வரிசைமிகுந்ததமி ழருணகிரியைநேயம்
வைத்துரட்சித்தவனை வணங்கிகென்றுனக்குபாயம்-என்னெ

சந்ததமுநமக் கிந்தவுலகபாசம்
சதமென்னவேநினைப் பதுவெல்லாம்வெகுமோசங்
கொந்தலர்விடம்பணி குமரன்மேல்விசுவாசங்
கொண்டுதியானித்துக்கொள்ளென் றுனக்குபதேசம்-என்னெ

அருளில்லாவேறெரு தெய்வத்தைகொண்டாடி
யலைவதும்பலந்தி யதனில்முழுகவோடித்
திரிவதுநலனல்ல முருகன்பதத்தைத்தேடிச்
சென்னைபூசனைபுரி யென்றுபாடிப்பாடி-என்மனெ

விடாதகொடுவினை மதமாச்சரியபோகம்
வஞ்சமுங்குடிகொண்டு வளரும்இந்தத்தேகம்
ஈடேறவுந்தனுக் கினிதானதுரையோகம்
ஈய்ந்தானைநீபணி யென்றுமதியனேகம்-என்னெ

மயின்மிசைவருஞான மவுனகுருநாதனை
மாம்பழந்தனைககாக்கும் மந்தாவிநோதனை
புயர்சிவகிரிதனி லோங்குநன்னீதனை
யுவந்துவந்தனைசெய்யென் றுனக்குநான்போதனை-என்னெ

உக-இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதிசரவணபவ குகனே-ஓம்
அரகரசிவசிவ

அநுபல்லவி.

சோதிமறைமுடிவின் மீதிநடனமிடுந்
தூயபரமசுக நேயமுனிவர்புகழ் ஆதி

சரணங்கள்.

பந்தஜெனனமர ணந்தனில்வீழும்
பாசமொழிந்துன துபதமலர்தாழுஞ்
சிந்தையுதவியருள் செய்வயல்சூழும்
திருமருவியசிவ கிரிமிசைவாழும் ஆதி
மதமொடுவினைபுரி விபிகமீறும்
மயல்விலகிடவரு முயர்கதிதேறும்
அதிசமதியதுதந் தாள்விடையேறும்
அரசனதுசெவிதனி லொருபொருள்கூறும் ஆதி
வந்தனுதினந்தொழு மதுரப்ரபந்த
மாம்பழந்தமிழினின் மகிழ்வுமிகுந்த
சுந்தரஞான சொரூபசுகந்த
துங்ககனதன சுமங்கலைதந்த ஆதி

காணவேணும்லக்ஷணங்கள் சீதாதேவிதன்
காலுக்குநிகரோபெண்கள்.
என்ற இராமகீர்த்தனையின் வர்னமெட்டு.

உச-இ-ம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தயவுபுரிந்தருள்வாயே சண்முகாநல்ல
தருணமிதுகதிநீயே

அநுபல்லவி.

கயல்விழியுமைபெற்ற கந்தாமனதிலுற்ற
கவலைமுழுதந்தீர்த்துக் கடைக்கண்ணாலெனைப்பார்த்து தயவு

அடிமையைக்கைவிடலாமா சிறுகுழந்தை
யன்னையைவிட்டுப்பின்போமோ
கொடியவினையைநோக்கிக் கோதையர்மயக்கம்போக்கி
நெடியபேரின்பந்தேக்கி நினைவையுன்வசமாக்கி தய

திரிந்துமெய்ப்பொருள்தேடியே ஞானநிலையைச்
சேர்வதற்கெண்ணிவாடியே
வருந்துந்தமியேன்மீது வாதுசெய்யலாகாது
கருங்குழற்குறமாது கணவாமகிழ்ந்திம்போது தய

பரமனிதயகெம்பீரனே மாம்பழஞ்சொலும்
பைந்தமிழ்க்கலங்காரனே
சுரர்புகழ்பெருமானே சொந்தமாகவேநானே
தரணியிலுனைத்தானே சதமென்றுநம்பினேனே தய

ஒருக்காற்சிவசிதம்பரமென்றுநீசொன்னால்
இருக்காதூழ்வினையே

என்றகீர்த்தனையின்வர்ணமெட்டு.

உரு-இ-ம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

மனப்பேயேதொல்லைவினைக்கொருமருந்தாகி
மந்திரமிதுதானே

அநுபல்லவி.

உனக்கோர்பயமுமில்லை யினித்தேர்ந்துகொள்வீரே
யோசனைஎன்னமுரு கேசனையெண்ணியிரு-மனப்

சரணங்கள்.

கடியபொய்களைச்சொல்லி வீணிலேயொல்லாத
காமத்தைத்தேடாதே மாதர்
வடிவைநினைந்துநினைந் துருகியுருகிமோக
மையலால்வாடாதே சற்றுந்
தடைபடாதவெங்கோப மூடர்குருத்துரோகிகள்
தம்மொடுகூடாதே நாளும்
அடியவர்பவவிருள் விடியவந்தருள்குமர
[illegible]றிப்பினொரு தெய்வங்களைப்பாடாதே-மனப்

துன்பமிதுசிவபே ரின்பமிதுவென்றுந்
தோணுமலலையாதே வளர்
பொன்புலிமுதலான செல்வநீர்மேற்குமிழி
போலநிலையாத துஷ்ட
வன்பினாலேயொருவர் தம்பொருளை விரும்பி
மானமுங்குலையாதே நல்ல
அன்பினொடுகுருப ரன்பதங்களைப்போற்றி
யஞ்சலிமெய்மதி கொஞ்சமுமலையாதே-மன
கர்மமேசதமென்று நீமருள்கொண்டுசும்மா
காலத்தைக்கழிக்காதே வந்த
நாமெனுமகந்தையி னாலொழுங்குமறந்து
நல்லோரைப்பழிக்காதே நெடும்
பூமிதனிலொருவர் தாமினிதுசெய்விக்கும்
புண்யத்தைபழிக்காதே நெஞ்சம்
தேமல்முலைவள்ளிம ணாளம்புயசெழுந்
திருப்பதமிசைம்பெறும் விருப்பினையொழிக்காதே-மன
வாதைதரும்ப்ரபஞ்ச மாயையினாலாகாத
மார்க்கத்தைபெடுக்காதே முதிர்
வேதநெறிதவறி மாதவமாமவுன
விரதத்தைக்கெடுக்காதே யென்ன
தீதுபுரியவந்த போதினுநீயொரு
சென்றுவைப்படுக்காதே தமிழ்
ஓதுகவிமாம்பழ மீதுக்ருபைவைத்தரு
ளுயர்பரமனைப்பணி செயவினைவிடுக்காதே-மன

நாராயணநாராயணஜெய
கோபாலகரே
என்றக்ருதிகையின்வர்ணமெட்டு.
நடு-இ-ம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

காதாமனுநீதா அருள் தாதாவிதுசமயம்

அநுபல்லவி.

வேதாமலர்ப் பாதா
போதாவென ... வாதாகுரு-நாதா

148235

சரணங்கள்.

மவுனகம ஜெகன்மோகன
வரதாஜெப மயில்வாகன-நாதா

கவிநாவலர் பணிகாரண
கருணாகர பரிபூரண-நாதா

புனிதந்திறல் புனமந்திர
புயசம்ப்ரம நயசுந்தர-நாதா

தினமாம்பழ மனமீதுறை
தெருளாகிய பொருளேநிறை-நாதா

நன்னுப்ரோவராதா நின்னுனம்மலேதா.

என்றகீர்த்தனையின்வர்ணமெட்டு.

உஉ-இ-ம்-கரகரப்ரியா-தாளம்-ஆதி.

பல்லவி.

நித்தமென்னவாதா சித்தமிரங்காதா
நித்தமென்னவாதா

அநுபல்லவி.

தத்யமனுநீதா சத்தியகிரிநாதா நித்த.

சரணங்கள்.

விரிகுணதீபா ஆர்மலர்நீபா
சூரதளகோபா தாரகசொரூபா-நித்த

வானவர்சகாயா தானநயதூயா
மோனகீர்த்திநேயா ஞானகார்த்திகேயா-நித்த

வரமருள்வேளே மாம்பழஞ்சொற்கேளே
தருணமிங்காளே தமியேனையாளே-நித்த

உஅ-இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இன்னந்தயவில்லையோ-பிதுவுனக்கும்மலையோ

அநுபல்லவி.

இமையோர்பணி வுமையாளருள்
குமாரயனு[illegible] வளமாகிலும்-இன்ன

சரணங்கள்.

காதற்கண வாதப்பர
வேதப்பொரு ளேயற்பமும்-இன்ன

கந்தரமகிழ்ந்திந்நேரங் காரப்பதுனதுபாரங்
கலசத்தமிழ் முனிவர்க்கொரு
நலசற்குண நெறிசெப்பியகந்தா
சிந்தாகுலவிசார
தீரும்படி நீயன்பொடு
பாருன்றனை யேநம்பினேன்-இன்
உல்லாசமுருகோனே யுற்றதுணைநீதானே
யுலகெங்கணு நிறையும்பிர
பலவிங்கித சுபமங்கள உல்லா
நல்லோர்தொழுங்கோமானே
கண்ணுஞ்சிக மென்கனஞ்சினி
லென்னுந்திரு முன்னின்னருள்-இன்
மயில்வாகனவினோதா மாம்பழம்புகழ்பூதா
வையாவுரி வளர்பன்னிரு
கையாமற கதநன்னிறமயில்
உயர்சிவகிரிநாதா
வுத்தமவுறு திக்கிடமெனு
நித்தியமுத வத்தருணம்-இன்

உகூ-இராகம்-சங்கராபரணம்-தாளம்சாப்பு.

பல்லவி.

மறவாதேமனதேயதில்-வரும்-வெகுகனமே. நீ

அநுபல்லவி.

திரமேசதுர்வேதந்-தேடுஞ்சண்முகன்பாதம் மறவா

சரணங்கள்.

விவரிதமதகாமம் விடுவதுசுபக்ஷேமம்
தவபுனிதநந்தேமந் தழைக்கமுருகநாமம்-மறவா
இன்னமென்னயோசனை யிதுபழக்கவாசனை
மன்னுமன்பர்பூசனை மகிழுங்குமரேசனை-மறவா
வல்லகிருஷ்ணசாமிநிதி மாம்பழநானுங்கருதிச்
சொல்லும்பழனியம்பதிச் சுப்ரமண்யமூர்த்திதுதி-மறவா

வினலோ நாமனவிச்சைகொனவேரா
என்றகீர்த்தனையின்மெட்டு.
உ௰-இராகம்-பியாக்கு-தாளம்-சாப்பு.

பல்லவி.

முருகையா-வரமருள்-பன்னிருகையா

அநுபல்லவி.

திருவளர்கதிதருஞ் சிவகிரிதனில்வரு-முருகை

சரணங்கள்.

தந்தைதாயுறவினர் சகலமுநீயே
சந்ததமுமெளியேன் றனைரட்சிப்பாயே-முருகை
சிந்தைதனிலிறக்கஞ் சிறிதெனுமில்லையா
தீவினைதனைமாற்றுஞ் செயலென்னமலையா-முருகை
தருணமயிலில்வரத் தாமசமேனோ
தமியேன்மயங்குவது சம்மதந்தானோ-முருகை
கருதுதமிழ்மாம்பழங் கவிக்கனுகூலா
கலசமுனிபரவுங் கதிர்வடிவேலா-முருகை

கூக-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுநல்லசமயம்நீ-யெனைரட்சிப்பாயே

அநுபல்லவி.

சதுர்மறைவேலா மதுரகுணாளா
சந்த்ரவதனதெய்வகு ஞ்சரிலோலா-கன
மந்தரத்திரிபுர சுந்தரிபாதா-இதுநல்
ஞானவிநோதா மோனவநீதா
நாகரிகசுகபர நயநீதாமலர்
கோதகனகபதசிவ குருநாதா-இதுநல்ல
சரதவொய்யாரா பரதமயூரா
சத்துருஜனகண்டன தளவீரவள
வுத்தமவடியர்தமக் குபகார-இதுநல்ல
பன்னிருவாகா வேள்பணிதியாகா-மிக
பத்தனுங்கிஷ்ணசாமி வேள்பணிதியாகா-மிக
நித்தியமாம்பழமனதி னிலனையோகா-இதுநல்

௩௨-இ-ம்-உசேனி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாதுசெய்வதேதுமனப்பேயே யினியென்
வார்த்தைதனைக்கேட்டுநிற்பாயே

அநுபல்லவி.

போதகுருநாதனருள்வேலா குகன்
பொற்பதம்வழுத்தென்றுநான்புத்திசொல்லச்சொல்ல

சரணங்கள்.

மைந்தர்புசந்தனசுகந்தந்தி மிரு,
மாதர்தருகாதலனந்தம்
இந்தவிதத்தொந்தபாசபந்தம் புன
விற்குமழியொக்குநமக் கென்னவந்தசொந்தம்-வாது

வீடுதனைத்தேடுவதுவீரங் துயற்குள்
வீழுமுடல்விண்பெரும்பாரம்
நீடுநாய்நரிக்குமுபகார என்ற
நிச்சயந்தெரிந்திருந்தும் நீயித்தனைதூரம்-வாது

ஆறுதகோபாக்கினியையாற்று புக
ழானதலையாவகைதேற்று
மாறுதமயக்கமதைமாற்று தமிழ்
மாம்பழம்புகழுமயில் வாகனனைபோற்று-வாது

௩௩-இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஓம்ஹரஹரசரவணபவ
வுன்னைநம்பினேன்-ஓம்

அநுபல்லவி.

மாமரகத வனகலாப
மயிலில்வருசின் மயசொரூப-ஓம்ஹர

சரணங்கள்.

தாரகாதிசோரசாந்த்ர தளநிக்ரஹதயாநன்னேத்ர
சேராராஜதானஸ்தோத்ர சிவகிரிவரதிவ்யக்ஷேத்ர-ஓம்ஹர

சரிதசுகுணசக்கணநேச ஜனஹிருதயசெஞ்சலலவாச
துரிதரஹிதசுகவிலாச சுப்ரமண்யஸ்வயம்ப்ரகாச-ஓம்ஹர

சத்ரமகுடசம்ரகாக தகனபதவதனயநேம
வந்திரசிதமதுபதூம மாம்பழஞ்சொன்மதுரநாம-ஓம்ஹர

ய௮-இ-ம்-மாஞ்சி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வடிவேலரசே-நான்
வருத்தஞ்சகிக்கமாட்டேனென்னைரட்சி

அநுபல்லவி.

அடியேனானுன் னடைக்கலமித்ததி
அஞ்சவிடாதே வையாபழனிம்பதி-வடிவே

சரணங்கள்.

அலவும்பகலும் புண்
ணுருதேபாவிநெஞ் சையோவென்னசெய்வேன்
சொல்லுந்தமியேன் றுதிசெவிகேளாதோ
சும்மாகபடத் தொழிலிதுதானேதோ-வடிவே
உனதுதய வென்மே
லுண்டாயிருந்தா லொருதாழ்வுமில்லையே
ஜெனனசாகரத் திற்சுழன்றேபுத்தி
தேறுதயர்வேனோ திவ்யபராசத்தி-வடிவே
என்றுந்துணை சிதா
னென்றுந்துணிந்தே னெல்லாமுன்னைச்சேர்ந்ததே
சென்றிந்திரனிடர் தீர்த்தருகாமுதிர்
செந்தமிழ்மாம்பழந் தியானித்திடுங்கதிர்-வடிவே

நாஜிகஜிய்யராரேபேதாதி
என்றஇந்துஸ்தான்வர்னமெட்டு.

௩௫-இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

கோலமாமயின்மீது-வந்தடிமை
கொள்வாயிப்போது

அநுபல்லவி.

வேலவாவுன்னை வேண்டினேனென்னை-கோல
கதியினிநீயே கவுரிதன்சேயே-கோல
துதிமிகுபுலவர் தொண்டனானவர்-கோல
பார்முழுதும்யும் படினடஞ்செய்யுங்-கோல
மார்பணிமின்ன மரகதவன்ன-கோல

இன்னந்தயவில்லையோ வீறுவென்ன தில்லையோ-கோல
மனந்துயர்தணிய மாம்பழம்பணிய-கோல

அந்தி[illegible] [illegible]தெல்லாமே

என்ற ஜாவளியின்-வர்ணமெட்டு.

௩௬-இ-ம்-[illegible]பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கந்தநாதா இந்தவேளை
கருணைசெய்யவேணுமே-கந்த

அநுபல்லவி.

தொந்தமுடைய பந்தவிடைய
துன்பத்தழுந்தி வெம்பினேன்
சிந்தைதெளிவ தெந்தவகைநின்
செம்பொற்பாத நம்பினேன்-கந்தநா

பண்டுகருது தொண்டர்தமது
பாவந்தீர்க்க வில்லையா
அண்டுமெளிமை கண்டுமெனையா
ளாததென்ன சொல்லையா-கந்தநா

சோதிப்பதுத காதிப்படிக்கை
சோரவிடுதல் நீதியோ
ஏதித்தனையென் மீதிற்கொடுமை
யேழைநான்வி ரோதியோ-கந்தநா

மதுரமாக மாம்பழஞ்சொன்
மகிழ்குஞ்சரிம ணேகரா
பதுமமாது மிதழூலாவும்
பழனிமலைக்கு பாகரா-கந்தநா

௩௭-நோட்டு-இ-ம்-பங்காளா-தாளம்-ஆதி.

பல்லவி.

கந்தப்பாவந்துசிந்தைக்
கதிதீர்த்தியிதுகதியே

அநுபல்லவி.

பந்தப்பாசவிமோசனமாம் பவிசுதசரவணபவநாதா
பழனுபுரியகபுததண்ட பாணிவிநோதமனோதீதா

பண்டிந்த்ரன் நண்கஞ்சகன்
கண்டின்பங் தங்கும்படிபுகழ் கந்த

சரணங்கள்.

மரகதபரிபுரநடனசிகா வளதுரகதஜெயவடிவேலா
மவுனப்ரவணசொரூபநிரா மயநிஸ்களஸ்லோலா
மந்த்ரகுங்குமபுயவீரா சுந்தரசம்ப்ரமவதிகாரா
வரகுண பரமகுண
வளர்தருண மகிமையின்மிகவுயிர்-கந்தப்

பலவிதபுவனசராசரவ்யாபகஜெகன்மோகன பவகோபா
பாரகிரீடம ரகனகாம்-பரதரகனசுரகுல தீபா
பக்தஜனப்ரியவனுகூலா-முக்தர்குறித்தவைதருசீலா சீலா
பரிமளசிந் துரகமுகம்
பரதனகுஞ் சரிதனைமருவிய-கந்தப்

சந்த்தமதுரகவிச்சிங்கந்தமிழ்மலர்புனைரக்ஷாபரனே
சாமிநதமகிபன்-தனிவிலகியசுபகரசரண
சகலசுபாக்கியகுமுதவுருகாய்சிகரசிவாத்திரியுசிதசுகா
தந்திரதடா மந்த்ரநிடா
சந்திரஜடா தரகயலோலா-கந்தப்

கெடிகெடியகுஜாலமா

என்றஜாவளியின்வர்ணமெட்டு.

௩௮-இ-ம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

அரகரகுகநாயகா
அருள்புரிவாயிதுசமயம் அரகர

அநுபல்லவி.

சரவணபவஓம் சண்முகமெய்யா
சரணஞ்சரணங் தடையேதையா அரக

மனஞ்சிறிதுருகா வகையேனமால்மருகா
வளர்தென்பழனி மலைமுருகா அரக

அனந்தசற்குணதண் டாயுதமுதல்வா
அகிலாண்டமுமீன் வகையேனமால்மருகா அரக

மாம்பழக்கனிகா வலன்பணியமரா
வதிகாவலசின் மயகுமரா அரக

சாமிகாநாதோமாட்லாடாதெந்துரா

என்றஜவாஸியின்வர்னமெட்டு.

இ-ம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதாகிலுஞ்சொல்லையா-சாமிநீவகை
ஏதாகிலுஞ்சொல்லையா

அநுபல்லவி.

தாதாவுனைப்போலுண்டாதண்டாயுதவுத்தண்டா
சூதாவல்லதுமுரண்டசாமிநீவகை ஏதாகிலு

செவிகேட்டுமேப்ரசன்னதெய்வமாகியுஞ்சொன்ன
கவிமேற்பராமுகமென்னசாமிநீவகை ஏதாகிலு

வினையின்மிகமருண்டுவிசனமனேகங்கொண்டு
நினைவுமென்னிலைமைகண்டுசாமிநீவகை ஏதாகிலு

மகிமையருளிச்சொந்தமாம்பழத்தையுவந்த
சுகிர்தசிவாசலகந்தசாமிநீவகை ஏதாகிலு

மதிலோனயேஜனபூட்டலேதா

என்றக்ருத்திகையின்வர்னமெட்டு.

௩௯-இ-ம்-அபுரூபம்-தாளம்-ஆதி.

பல்லவி.

மயில்வாகனுவரவேணுமென்முன்-மயில்வாகனு
வள்ளிகுஞ்சரிமோகனு-மயில்வாகனு

அநுபல்லவி.

கயிலரசபதிஸ்ரீ கௌரிநந்தனு
கன்றுதீதுநக்க நின்றுபாதுகாக்க-மயில்

சரணங்கள்.

உண்மையாககானே யுன்னைநம்பினேனே
ஓங்காரத்தேனே யுற்பனவானே
சண்முகாபழனித் தண்டபாணியாஞ்
சாமிமாம்பழஞ் சந்ததம்பணியும் - மயில்

௬௰-இம்-தோடி-தாளம்-சாபு.

பல்லவி.

சரவணபவனையோர்-தரமாகிலு நினைத்தாற்
சகலசித்தியுமாமே

அநுபல்லவி.

வரமருவியமேரு கிரிதனைநிகரான்
மருதகிரியில்வளர் மவுனசுரதஞான
வரதன்மணிமுடி யுரகர்தவமுனி
வரர்களிமையவர் பரவியடிதொழ
வந்தகுருபர கந்தனுமையருள்
மைந்தனதிகசு வுந்தரநயகுண-சரவண

சரணங்கள்.

நடுக்கம்பொய்கொலையோட மெடுக்குந்தீவினைநீக்கும்
நமையனுதினங்காக்குந் தமிழ்மதுரிதவாக்கும்
கொடுக்கும்யமபாசத்தைக் கெடுக்குங்கருணைதேக்குங்
குறைமுழுதையும்போக்கு நிறைசெல்வமுண்டாக்குங்
குக்குடத்துவ சக்கரக்குகன்
மிக்கபற்பற தர்க்கமிட்டவ
கோரமேவிய சூரசேனைகள்
போரிலோடிட வீரவேள்விடு-சரவண

உலகவஞ்சனைமாயை விலகமெய்வழிகாட்டும்
ஓதுநியமமனு நீதியேபாராட்டும்
அலைவரும்பாகதி நிலைமையதுகைக்கூட்டும்
அன்புடனினியபே ரின்பரசத்தையூட்டும்
அடலனந்தனு நடுநடுங்கிட
வடியர்வெம்பிணி கெடாநடஞ்செயு
மழகுமரகத மயிலின்மிசைவரு
குழகனரிதிரு பருகனரக-சரவண

சிந்துரநுதல்வள்ளி சிந்தைமகிழ்குணாளன்
சீர்த்திமிகுதெய்வ மூர்த்தியேழைபங்காளன்
மந்தரமாமென வயங்கும்பன்னிருதோளன்
மாம்பழம்போற்றிசெய் வனசமென்மலர்த்தாளன்
வண்டிருந்திசை கொண்டெழுந்தக
ளூண்டுறங்குக டம்பணிந்தருள்

வாசமார்சவி லாசனுமுரு
கேசன்மோகன நேசபூரணா-சரவண

ஓரமணிமனுசாமினித்தேவே
என்றபோவின்வர்னமெட்டு.
௩௧-இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாமயிலேறிய கூர்வடிவேலா
கூர்வடிவேலா பார்வதிபாலா

அநுபல்லவி.

கோமளதேகா பூமலர்வாசா
தாமசமாகா தேகமகாத்யாகா-மாமயி
இத்தனைரூதா பத்தன்மேல்வாதா
சித்தமிராதா முத்தமிழ்வேதா-மாமயி
சொல்வதுகேட்டு நல்வழிகாட்டு
வல்வினையோட்டு கல்வியைநாட்டு-மாமயி
சோம்பல்கள்வெய்ய பாம்பகைகைய
மேம்படுதுய்ய மாம்பழமுய்ய-மாமயி

என்தவேடுகொந்துராகபா
என்றக்ருத்திகையின்வர்னமெட்டு.
௩௨-இராகம்-சரஸ்வதிமனோஹரி-தாளம்-ஆதி.

பல்லவி.

வர்மமின்னமென்ன வேலவா
தர்மமில்லையா ஓவேலவா

அநுபல்லவி.

கர்வமஞ்சகக் காடுலாவினேன்
நிர்மலாவுனை நின்றுகூவினேன்-வர்மமி

சரணங்கள்.

என்றுமொனரபோலே யுந்தக்கஷ்டமா
இப்படிநீசெய்வ தேயிஷ்டமா
மன்றலந்தமிழ் மாலைசூழ்பொற்பாதா
மாம்பணியும் வன்னிப்ராணநாதா-வர்மமி

ஹரிநேகெந்துவெதருதுரா

என்றக்ருத்திகையின்மெட்டு.

௪௩-இராகம்-அரிகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

உன்னைநானம்பின வனல்லவா

அநுபல்லவி.

தானந்தவத் தருஞானகுண
சந்தானதண்டாயுத சதா-உன்னை

சரணங்கள்.

அறியாதவ னானும்அடிமை
பதனைலென்னை யானையா
கறைதீரசெல்வக் காங்கேயா
கனிமாம்பழத் யானகாரணா-உன்னை

முன்பேதெலியகபோயனே

என்றக்ருத்திகையின்வர்ணமெட்டு.

௪௪-இராகம்-பங்காளா-தாளம்ஆதி.

பல்லவி.

முருகாக்ருபைதர வில்லையா
முழுவதும்பிருவாமா சொல்லையா

அநுபல்லவி.

திருவளர்செந்தி லம்பதிவேலர்
ஜெகமெங்கு மேபுகழ்சீல-முருகா

சரணங்கள்.

காமாதிதுன்பக் கடல்படியாது
கைதூக்கியென்னை யாளிப்போது
பாமாலைபுனைமாப் பழம்பணிநாதா
பவவிருள்விலக்கிடீ பார்க்கலாகாதா-முருகா

தயாநிதிக்கண்ணிகள்.

வெண்செந்துறை

சீர்பூத்தகொங்கையுமைமைந்தா தயாநிதியே
வார்பூத்தகொங்கையுமைமைந்தா தயாநிதியே. ௧

இந்திரனைக்காத்தவுன்னாலென்னமுடியாதிடர்தீர்
தந்திமுகத்தெந்தைசகோதர தயாநிதியே. ௨

மாமறைநாலுந்தொடரமாட்டாவுனையெனிலிப்
பாமரனாலென்னாம்பழனித்தயாநிதியே. ௩

கீர்த்திவிஜயகிரித்துரைகாலத்தினிற்செய்
பூர்த்திமகிமையெல்லாம்பொய்யேதயாநிதியே. ௪

இக்கலிகாலத்தினுமிங்கேயுனைப்போதுந்தெய்வந்
துக்கமெலாநீங்குவெட்சி சூடுந்தயாநிதியே. ௫

சற்றுமறிவில்லாத சண்டாளனானெனினு
முற்றுமெனையாள்வாய் முருகா தயாநிதியே. ௬

பத்திசிறிதேனுமில்லாப் பாவினானென்றாலுஞ்
சித்தியருளையா சிவாசலதயாநிதியே. ௭

என்னபிழைநான்செய் திருந்தாலுநீபொருத்து
வன்னமயிலேறியென்முன்வாவா தயாநிதியே. ௮

வாராயோமயிலில்வந்துகலிதீர்ந்துவரந்
தாராயோதென்பழனிச்சண்முக தயாநிதியே. ௯

மாயவிகாரமயக்கையெலாமாற்றியெனை
நீயான்பழனிநிமலா தயாநிதியே. ௰

உனையன்றியுண்டோவுலகிலெனக்குற்றதுணை
யென்னைவஞ்சியேல்பழனியெந்தாய்தயாநிதியே. ௰௧

தீராதவெவ்வினையுந்தீர்க்குநீயேழைமுகம்
பாராததென்னதண்டபாணித்தயாநிதியே. ௰௨

எப்பாவமுகமகற்றியீடேற்றல்வேண்டுமெனை
யப்பாசிவகிரித்தண்டாயுதத்தயாநிதியே. ௰௩

சூதுதான்கற்றனையோசும்மாவிருந்தனைநின்
காதுதான்கேளாதோகந்தா தயாநிதியே. ௰௪

ஈராறுகாதிருந்துமென்சொற்கேளாததென்ன
பேராறுசூடிபெற்றபிள்ளாய்தயாநிதியே. ௰௫

பன்னிரண்டுகண்ணிருந்தும் பாராத்தென்னவென்னை
யுன்னிரண்டுதாளுநம்பியுற்றேன்தயாநிதியே. ௰௬
நீமனதுவைத்தாநிரம்பாததுவுமுண்டோ
பூமனதுமாமதைபோக்குந்தயாநிதியே. ௰௭
எல்லாவினைப்பயனுமென்னிலுனக்கென்னபுகழ்
சொல்லாயுள்ளாசவள்ளி தோயுந்தயாநிதியே. ௰௮
ஆனாலுமிந்தவனியாயமுனக்காகாது
தேனார்கடம்புனைதிண்புயதயாநிதியே. ௰௯
இப்படியேநீயிருந்தாலென்னசெய்வேனோருறுதி
செப்படியேனுந்தனுக்குச் சிவாசலதயாநிதியே. ௨௰
நீயிருக்கநின்பேர்விளங்கிருக்கவென்னுடலி
னோயிருக்கலாமோகுவலுந்தயாநிதியே. ௨௧
அட்டியென்னவின்னுமெனையாதரிப்பதாலுனக்கு
நட்டியென்னசொல்லுவள்ளிநாயகத்தயாநிதியே. ௨௨
காலமெல்லாம்வீணேகழித்துமயங்காதுநல்ல
சீலமெலாநல்கிவினைதீர்க்குந்தயாநிதியே. ௨௩
எத்தனைதுன்பங்களெளியேனெப்படிசகிப்பே
னத்தனையுந்தீர்ப்பழனியப்பாதயாநிதியே. ௨௪
நானனந்தமாகநின்றுமிரங்காததென்ன
தீனபந்துநீயலவோ செந்தூர்த்தயாநிதியே. ௨௫
பாடவறியேனெனினும் பற்றினேனின்னையெனை
வாடவிடலாமோவடிவேற்றயாநிதியே. ௨௬
கற்பனையோபூர்வகதைகளெல்லாமல்லதுநீ
சற்பனையோசெய்கின்றாய்சாமிதயாநிதியே. ௨௭
பொய்த்தெய்வபத்தருஞ்சீர்பூண்டனர்நானம்பியநீ
மெய்த்தெய்வமென்னசொல்வேன்வேலாதயாநிதியே. ௨௮
பானுமுனமேதுபனிநீகண்பார்க்கினிடர்
தானுமுளதாமோசடாட்சரதயாநிதியே. ௨௯
ஒன்றுந்தெரியாதுழன்றேனைக்காப்பதுனக்
கென்றுங்கடமைசெவ்வேலேந்துந்தயாநிதியே. ௩௰

சிவசுப்பிரமணியக்கடவுள்பேரிற்
கீர்த்தனங்கள்-முற்றிற்று.

உ

ஸ்ரீதண்டபாணிதுணை.

பழனிவெண்பாவந்தாதி.

காப்பு.

நேரிசை-வெண்பா.

மதிமென்பூதநந்தன்மேல்வந்தூர்பழனிப்
பதிவெண்பாவந்தாதி பாடத்-துதிபுரிவாங்
காமகோட்டத்திக்கலசமுலைப்பாலருந்தித்
தாமகோட்டத்தி தனை.

நூல்.

கார்தாங்குபூமரங்கள் காமரெங்களியாடிவரு
சீர்தாங்குவண்டுவப்பத்-தேன்பிலிற்றி
வண்வமப்பழனிமயில் வாகனுநீயெனையா
ளுண்மைத்துணையாக வுற்று. க

உற்றார்பெற்றார்பிறரா லுண்டோவுறுதிமிகக்
கற்றார்மற்றாருங் கனிந்தேத்தும்-நேர்தாங்கு
வடிவேற்குகாபழனி வள்ளால்கனேக
ணடியேற்குநின்னருளே யாம். உ

ஆமைப்புறவடியா ராமைக்கடலழுந்துந்
தீமைப்புலையேனைத் தேற்றாயோ-மாமைக்
கழனிக்குகாமுக்கனிகடந்தேன்பாய்
பழனிக்குகாகடைக்கண் பார்த்து. ங

பார்த்துயருமேலைப் பசும்பொற்பதித்துபருந்
தீர்த்துயருநின்னைத் தியானித்தும்-போர்த்து
மனமலையினென்னும் வளர்பழனிக்கந்தா
தினமுநிலைநிற்கவருள் செய். ச

செய்பவினது திருவடிபோற்றித்தமியேன்
துய்யவிரைவினுளந் தொளிப்பாய் துய்யவடி
வெலாபழனி விமலாவுமையீன்ற
பாலாததியி துவப்பா. ரு

பாவலர்சூழ்தென்பழனிப் பண்ணவாவிண்ணவர்கைப்
பூவலர்சூழ்நின்னருமைப் பொன்னடிமை-மேவலர்தாங்
காமமுதலாய் கடலைப்படிக்கடந்து
மாமவுனவாழ்வுபெறுவார். ௬

வார்கமுகின்மாகமுகின்மன்னுபழனிக்குமரா
தீர்கவலைமோகவலை சின்னவெனக்-கார்கதிமற்
றுன்னையவதென்னைசொல வுள்ளதுநீதள்ளவொண்ணா
தென்னைவகைதன்னையறியேன். ௭

ஏனய்யாவன்மமிரக்கமில்லையாவீணி
ணானய்யாதென்னையுன்னைநண்ணுவிப்பார்-வானை
யடரும்பொழிற்பழனியாண்டவாவீண்டெம்
விடருந்தவிர்த்தருளியே. ௮

ஏதும்றியாதுழலுமேழைநானென்னினுமென்
மீதுதயவேபுரியவேளையிது-நீதுணையென்
றுற்றேன்பழனி யுடையாயயிற்படையா
மற்றேன்பராமுகஞ் சும்மா. ௯

மாதாபிதாகுருதெய் வங்களெலாமிங்கெனக்கு
நீதானெனைவிலக்கநீதியன்று-லாதாரம்
வேறுணர்கிலேன்பழனிவித்தகாவெவ்வினையை
நீறுசெயல்வேண்டுமின் தேர்ந்து. ௰

நேர்ந்தனதுநாமநிகழ்த்துவெளியேன்பவநோய்
தீர்ந்துவிடநீகருணைசெய்குவாய்-சோர்ந்து
பராமுகமாயுற்றூர் பாலாக்கும்பழனிக்
குமராவடிவேலாபழிப்பாகும் ௰௧

கும்பிட்டிறைஞ்சாக் கொடியேன்குணமிலிநான்
வம்பிட்டகொங்கைமின்னார்மாலுழந்து-வெம்பிப்புண்
ணானேனெனினுமறிவுதிருத்திப்பழனிக்
கோனேயெனையடிமைகொள். ௰௨

கண்களளித்துளையெறும்பாய்க் கோரநோய்க்கஞ்சுமெனைத்
கண்ணிற்பழியுனைத்தான்சாராதோ-மள்ளிக்கு
நண்பார்தமிழ்ப்பழனிநாதாவுனக்கபயந்
தண்பார்கருணைகனிந்து. ௰௩

கனிந்தகனியின்பொறையாற்கற்புடைமாஞரிற்
குனிந்தவளிநோக்குதருக்கொம்பர்-முனிந்தனிலாச்
சிந்தமுதுவண்டுதெவட்டியிசைக்கும்பழனிக்
கந்ததமியேனைமுற்றுங் கா. ௰௪

காவிசூழ்வாவிக்கழனிப்பழனிவள்ளல்
பாவிநானென்னினுங்கண் பார்த்தருளித்-தீவினையை
மாற்றுவதுநின்கடமைவஞ்சிப்பாயாகிலெனைத்
தேற்றுபவர்நீயலதார்செப்பு. ௰௫

செம்புக்களிப்புவல்லோர்தீர்ப்பதுபோலென்னிதயத்
துப்புகளைந்துனையேதோத்தரிக்கு-மப்புத்தி
தந்துகதிகாட்டச் சமயமிதுமாயவிலில்
வந்துபழனிக்குகதே வா. ௰௬

வாவாவினித்தாமதியேல்வளர்பழனித்
தேவாதிதேவசிகாமணியே-நீவாது
பண்ணுவதுமுறையோ பாவமுனக்கிலையே
நண்ணுமுனதடிமைநான். ௰௭

நான்முகனும்மான்முகலநல்லோர்மற்றெல்லோருங்
கான்மருவுதேன்மலர்தூய்க்கைக்குவிக்க-மேன்மைதரு
தென்பழனியின்பச் செழுஞ்சுடரேநீயெனையா
டுன்பமணுகாமலெப்போதும். ௰௮

தும்பிமுரல்சோலைபுடைசூழ்பழனிவாழ்பரம
வெம்பிணியிலென்னைவிடலாமோநம்பி
யுனக்கபயமென்றாலுபோகோவிரங்கா
மனக்கபடமென்னசொல்லுவாய். ௰௯

வாய்துதிக்கச்சென்னிவணங்கக்கரங்கடொழத்
தூய்துபெற்றுச்சிந்தமுனைச்சூழ்ந்துருகப்-பாய்திரைப்போற்
கஞ்சமடுத்தென்பழனிக்கார்த்திகேயாநியமித்
தஞ்சலெனத்தேற்றியெனையாள். ௨௰

ஆளிமுகநாதியவுணரையெல்லாமடர்ந்த
மீளியெனுநீயெனவெல்வினையைத்-தூளிசெய
மாட்டாயோவஞ்சனையேன்வாழ்பழனிவேல்முருகா
காண்டாயோநல்லகதி. ௨௰௧

கதிரீயலாதிலைசிங்காரப்பழனிப்
பதிஞானபண்டிதவிப்பாவச்-ச்திநோயை
நீப்பதரிதோநினைவின்படிக்கென்னை
காப்பதுனதுகடன். ௨௨

கடனேயடாதுகலிநோய்தொடாது
திடனேவிடாதெனைநீதேற்றி-யுடனேயாட்
கொண்டலதனாற்குறைவுனக்குண்டோபழனித்
தண்டாயுதாகுகநா தா. ௨௩

தாமதியேலென்றும் சகிக்கமுடியாதுதுயர்
தீமதியேனென்னினுநான் றேறியுய்ய-நீமதியே
நட்டமுனக்கென்னதனி நற்பழனியப்பாநின்
னிட்டமனைத்தும்பிறிதொன் றில். ௨௪

இல்லாமையில்லாமையெவ்வளவும்வெவ்வினைநோய்
புல்லாமையுள்ளம்புலராமை-நல்லாமை
மல்குபுனல்சூழ்பழனிவாசமுருகேசவரு
ணல்குசவியேலெனையிந்நாள். ௨௫

நாளின்பகைபிலக்குனப்பகைராசிப்பகைபல்
கோளின்பகைக்கொடுமையும்-வாளின்கட்
குஞ்சரிபங்காபழனிக் கொற்றவாதீர்த்தெனது
நெஞ்சகநின்றேயருள்வாய் நீ. ௨௬

யேகலியுநீகத்திநிச்சயதெய்வம்புவிக்கோர்
தாயேயெனைவந்தனையன்றே-நோயேகச்
செய்யாயெனிலுனினுந்தென்பழனிமேவியவென்
னய்யாவருளினர்மற்றார். ௨௭

ஆராரோமுன்னினருளடைந்துய்ந்தாரெனவிப்
பாரோதுஞ்சொற்பழுதேயோ-நேராகி
வென்னமுறையிட்டுமிரக்கமில்லையேபழனி
மன்னவிதுதன்மமன்றுள்வந்து. ௨௮

வந்துலவுபஞ்சாய் மனதுசுழலாதுறுதி
தந்துபிணிதீர்த்தாணின்றுய்த்தந்தை-நொந்து
இடுப்பாரேதென்பழனித்தெய்வமேவைது
தடுப்பாரோகாதலிமார் தாம். ௨௯

தாம்பார்வலைவீழ்தனிமான்போன்மாலுழன்று
சோம்பாவறிவுதுலங்கியே-பூம்பாத
சேவைதரல்வேண்டுந்திருப்பழனிச்செல்வவின்னாள்
யாவைமுடியாதனவையா. ௩௰

யாழுந்தலைவணங்கயாணர்வண்டுபாடுபொழில்
சூழுந்தமிழ்ப்பழனித்தோன்றலென்-ஊழ்வினைநோய்
தீரேகருத்தைத்திருத்தேயருட்கண்ணாற்
பாரேயுனக்கெனகோபம். ௩௧

பம்புபுனல்வாவிப்பழனிப்பிரானேயென்
வெம்புபிணிநீதவிர்க்காவிட் டாலிவ்-வம்புவிதா
னேதுசொல்லாதுன்னையதிலென்னநமக்கென்னிலொரு
போதுமெய்யாமோநின்புகழ். ௩௨

புகழத்தெரியாதபுன்மையனென்றென்னை
யிகழத்தகாதுநின்பாலென்றும்-திகழ்பத்தி
நாட்டவமைத்துப்பழனிநாயகாநீயிதய
வாட்டமொழித்தாள்சலியாமல். ௩௩

மல்லார்புயப்பழனிமாமுருகாநெஞ்சமென்ன
கல்லாசிறிதுங்கரையாதா-பொல்லாத
வேளைபலபாவநின்னால்வெல்லமுடியாதனவா
தாளைநினைவேனையின்னேதாங்கு. ௩௪

தாங்கச்சியிலைசார்தற்கிதுதுலையா
நீங்கச்சமுசந்திர்த்திடன்மலையா-பூங்கச்சிங்கட்
டோங்குதனப்பொன்மாதுலாவுபழனிப்பதியா
மீங்குவரத்தாமதிப்பதென். ௩௫

என்னாலினிச்சகிப்பதெப்படியப்பாவருத்த
முன்னால்விலக்குவதற்கொண்ணாதே-பொன்னாடு
கத்தாயேதென்பழனிக்கந்தாவடியரிடர்
தீத்தாயேநெஞ்சகத்தினின்று. ௩௬

நின்றனையுண்டாகிலெந்தநீசரும்வெம்பாசவினை
வென்றுசுகம்பெற்றுவிளங்குவரா-லென்றுயரம்
பற்பலவுமற்பகலாப்பார்த்துமிரங்காததென்ன
பொற்பழனியற்புதவிப் போது. ௩௭

போதுபலதூவினைப்பூசித்திறைஞ்சுகிலேன்
சாதுவெனநீதிசழுவுகிலேன்-ஓதுபல
கற்றேன்பழனிக்கடம்பநின்பேர்பன்னவுன்னப்
பெற்றேன்பொறுப்பாய்பிழை. ௩௮

பிழைத்தோமவுனப்பிணிதவிர்ந்தோமெல்லாந்
தழைத்தோமெனபுவிதாதாழா-மழைத்தொனியிற்
போற்றதடிவேலெடுத்தபொற்பழனியப்பவென்புன்
ஞாற்றவிதுவேபருவமால். ௩௯

ஆல்வளர்சுஞ்ஞானவாசின்றபூங்குருந்தே
மேல்வளர்செந்நெற்பழனிமெய்ப்பொருளே-மால்வளர்புன்
னெஞ்சேன்வருத்தத்தைநீக்கிச்சுகந்தேக்கி
யஞ்சேலெனக்காத்தருள். ௪௰

அருள்சிறிதுநீபுரிவா யாகிற்கொடிய
மருள்சிறிதுமென்பால்வருமோ-தெருள்செறியு
மன்பர்புகழ்தென்பழனி யாறுமுகதேவவிரைந்
தென்பழயவல்வினை தீர்ன்று. ௪௧

இன்றுதியொன்றுந்தெரியா தென்றுமுனியேயெலனீ
யன்றுதிாண்டென்புமுரு வானதன்றோ-நின்றுபெருந்
தெய்வமதித்தர்ப்பழனிச்செல்வாமுற்றுதவுண்டா
மெய்வருபெற்றுய்வகையைவிள். ௪௨

விள்ளும்புதியமலர்மென்மணம்போல்விண்புவிமற்
றுள்ளும்புறமுநிறைந்தோங்கு-நின்பாற்
விருப்பமகலாதருளிமெய்யுருதிதந்து
திருப்பழனிவேலவனேதீர். ௪௩

தீர்த்தமனந்தம்படிந்தென்றெய்வம்பலதொழுதென்
பார்த்ததலந்தோறும்பயின்றுரைந்தென்-கார்த்திங்கமுன்
னேந்தியமைந்தாபழனியெந்தாயுனதருளாற்
சாந்தியமைந்தாசையறுதார். ௪௪

தார்புனைதோளுங்கமலத்தாளுந்தனிவேலு
மார்புறைநூலுஞ்சேவலுமயிலு-நேர்பொலியக்
காட்சிகொடுத்தென்னைமுற்றுங்காப்பாற்றல்வேண்டுமினி
யாட்சியுடைத்தென்பழனியாய். ௪௫

ஆயுங்கலைகற்றருந்தவஞ்செய்தாலுமெனைத்
தோயுங்கனிவெளிதிற்றோன்றுமோ-தாயும்
பிதாவுமெனநீயருளிப்பேணிநல்லாற்செம்பொற்
பதாபழனிவேலா பணி. ௪௬

பணியெனக்குநின்னைப்பணிவதுவேதாகத்
துணிவுமுற்றுநல்கித்தொடர்ந்த-பிணிநொடிக்குன்
மாற்றிப்பழனி வரதாவருளாவீ
டேற்றிப்புரப்பாயெனை. ௪௭

எனைத்துமுனதின்னருளாலிங்கியங்குமென்று
லுனைத்தவிரவேறுபொருளுண்டோ-வனைத்துமொரு
நீயேயெனக்கன்னியனுச்சேயேல்கவுரி
சேயேபழனியரசே. ௪௮

சேவியேனின்னைவலஞ்செய்யேனய்யோகொடிய
பாவியேனுனெப்படியுய்வேன் மேவியெனை
யாளாயோதென்பழனியப்பாவிண்ணப்பமொன்றுங்
கேளாயோவுள்ளங்குளிர்ந்து. ௪௯

கிளர்ந்துவடமேருவையுங்கீழடக்கிமென்மேல்
வளர்ந்துபடல்சீறிவறினுந்-தளர்ந்துவிடாச்
சித்தருங்காணுதவுனைத்தென்பழனியப்பாநா
னெத்தரங்காணப்பெறுவேனிங்கு. ௫௰

இங்குமுளாயெங்குமுளாயென்பதனுற்
பொங்குபுராணாகமங்கள்போதுமோ-மங்குதறீர்
வேதமுமெய்ப்பாமேநின்மேன்மைபெறவப்பழனி
நீதவுனக்கேதுநிகர். ௫௧

நிகர்விகளாய்நீதிநெறிநின்றுதுதியென்றும்
பகர்பெரியோருள்ளுறைபொற்பாதப்-புகர்மதமால்
யானைதுணைவர்பழனியவ்வனவேதமிய
னேனையினிநீவஞ்சியேல். ௫௨

ஏலாதனவுமக்கேனுமெனவென்னிதையை
மாலாயுழன்றுவருந்துமந்தோ-மேலாங்
கதிதேறுவதினியெக்காலம்பழனிப்
பதியாய்ப்பரிபாலிப்பாய். ௫௩

பாயும்புலனைப்பலவழிச்செல்லாதடக்கி
வாய்ந்தனுவுமன்றுகமாத்து-நோயுந்
துயருமகன்றுன்னைத்தொழப்பழனிகந்தா
தயவுபுரிந்தாளெனைநித்தம். ௫௪

தம்பமுயிர்க்கெல்லாநின்றாளலதுவேறில்லை
யிம்பரெனைக்காக்கவுனக்கென்னதடை யம்பழனிக்
காங்கேயாவள்ளிகணவாணிச்சிறிதுந்
தீங்கேயாவண்ணந்திருத்து. ௫௫

திருத்துவசத்தோகைச்செழும்பழனியாயென்
கருத்துவசந்தோகைக்கனிவைப்-பொருத்து
மயக்கவலையும்வருத்தும்பலகா
மியக்கதலையும்விட. ௫௬

விடத்தாலோதொல்லைவினையாலோவீண்சங்
கடத்தாலோமாதர்கல்வி-நடந்தாலோ
வேதினாலோவிளைந்தவிந்நோயாற்றென்பழனி
யாதிபர்தீர்த்துரனுண்டாக்கு. ௫௭

ஆக்குலமும்பொன்னாட் டவர்குலமுமன்பர்களின்
மாக்குழுமுங்காக்குநெடு மான்மருகா-தாங்குலமு
வன்னபுயத்தென்பழனி யப்பாவடியேன்மே
லென்னவெறுப்பின்னமுமீடேற்று. ௫௮

ஏற்றுநடையாள ரெனினும்பிணிப்பட்டா
வாற்றுவதுகால வரிதன்றோ-போற்றுவது
மோராநானென்னசெய்வே னோகோபழனியப்பா
தாராயோதேகசுகத்தை. ௫௯

தையலரும்பிறருந்தாமொள்வோர்தன்மையெண்ண
மையலரும்பிணிக்குள்வாடுவனோ-மொய்யலர்சூழ்
நந்தவனத்தென்பழனி நாயகாநீயெனையா
ளிந்தவனத்தெங்கவிர்த்தேயீண்டு. ௬௰

ஈண்டுகடவுட்புலவோரின்கவிகளெத்தனையோ
பூண்டுவளர்கின்றநின்மேற்புன்மையினேன்-வேண்டுவன
பாடினுமின்பமர் பழனிக்குகாநீயே
வாடினவென்பாற்கருணையை. ௬௧

வைவார்தமையுயர்த்தி வாழ்த்துவரைவாட்டுவது
சைவாகமதெய்வ சம்மதமோ-கைவேழ
மூர்பழனிவேன்முருகா வுண்மையறியேனருளித்
தீர்பழயவெவ்வினையாந்தீங்கு. ௬௨

தீங்குதலைவள்ளிபுணர் தென்பழனிக்கந்தாநா
னேங்குதலைநீசிறிது மெண்ணிலையே-யோங்குதலை
மீதுவிதியெழுத்தை வெல்வதரிதென்னிலுனக்
கேதுமகிமை யியம்பு. ௬௩

இயம்புலிநாங்காங் கிசைக்கும்பழனிச்
சுயம்புமுருகாகிடங்கிச் சோர்ந்து-சுயம்புகல்போற்
பந்தபாசத்திடைவீழ் பாவியேனைப்புரப்ப
தெந்தநாளந்தோ வினி. ௬௪

இனிக்கவுபசார மியம்பியுடம்பெல்லாம்
பனிக்கமுழுநாவும் பதறத்-துணிக்கயவர்
தம்பாலலைந்து சலித்தேனருள்பழனி
வம்பார்க்கடம்பா வளம். ௬௫

வளர்கின்றதுகவலை வாட்டுகின்றதாசை
தளர்கின்றதுமனது சால-வளர்கின்ற
வண்டுலாஞ்செச்சைமணி மார்பழனிக்குகநின்
றொண்டுநான்கண்டுதிடஞ் சொல். ௬௬

சொல்லுபசுங்கரும்புஞ் சூழ்பழனியாய்முறையிட்
டல்லும்பகலு மலருவனோ-கல்லு
மிரும்புமுருகுந்தகவே யில்லையுனக்கென்மேல்
விரும்புவனதந்தாள் விரைந்து. ௬௭

விரைமலர்தூவிக்கனியை மென்றளிர்க்கைக்கொண்டு
விரையில்கணீர்பொங்கி வணங்கி-நிரைநிரையே
பூசையன்பர்போலும் பொழிற்பழினிப்புங்கவவென்
மாசையின்றுதீர்த்தருள்செல் வம். ௬௮

வம்புலபுநின்மலர்த்தாள் வாழ்த்துனர்க்கெல்லாம்பழனி
யம்புனிதபண்டிதனீ யன்றியுண்டோ-நம்பும்
வகைவருந்தேனுங்கனவில் வந்தாகிலுஞ்சொன்
மிகையுறுந்தீய்நோய்தொலையவே. ௬௯

வேற்றுமருந்தேன் விபூதியொன்றேபோதாதா
தேற்றினருண்மாத்திர மிருந்தார்-காற்றளவு
யஞ்சாமேநோயனைத்தும் பரிர்த்துபழனியுள்ளா
வஞ்சாமேயாள்வ தான. ௭௰

அறக்கொடிதேசெய்வாதழகாவுனக்குக்
குறக்கொடிசேரும்பழனிக் கோவே-மறக்குடிலத்
துன்பமெல்லாமின்னே தொலைத்துத்தொழுதுய்ய
நின்பதமேநல்கியென்முன் னில். ௭௧

நில்லாதனபலவு நின்பனவென்றேமயங்கிக்
கல்லாதவரிற் கடைப்பட்ட-பொல்லாத
வென்னைநீகாம்பரசோ வெம்படியோபொற்பழனி
மின்னையில்வேலாவுணரேன மெய். ௭௨

மெய்யோபழமின் விடவம்புனற்குமிரு
யய்யோநினை வனேகவிதம்-பொய்யோதி
வீணாள்கழித்தேன் வினைதீர்த்தருள்பழனி
வாணாகுறித்த வரம். ௭௩

வரம்பிலடங்காதுபொல்லா மாயாவிகாரந்
திரம்பிறிதோன்றித் திகைத்தே-னிரம்புசெழுங்
கெச்சைப்புயம்பழனித் தேவேயெனைத்திருத்தி
யிச்சைப்படிக்குவரமீ. ௭௪

ஈயுமெரும்புள் ளினமுநரியும்பலபேய்
நாயுமருந்தூ னுடம்பை நானென்ற-யோயுங்
கருத்தினேனைப்பழனிக் கற்பகமேமுற்றுந்
திருத்தினால்வாழ்வுநின் சீர். ௭௫

சீர்தனைகுன்றுங்கவிபோற் றென்பழனியப்பாநான்
பார்தனிநிந்திக்கப் படுவேனோ-நேர்தழுவுந்
தன்மையில்லைவத்தின்மைபிணி சஞ்சலமெல்லாம்விலக்கி
நன்மைவிளைத்துண்மைநிலை நாட்டு. ௭௬

நாட்டுள்ளசெல்வர் நகைக்கநகைப்படுசொற்
கேட்டுள்ளமொல்கிக் கெடாமலினை-வேட்டுள்ள
மூதறிவுநீதருவாய் மும்மைத்தமிழ்ப்பழனி
நீதருகநாதவினை நீத்து. ௭௭

நீத்தமெவையும்பொன் னிரைபொழிக்குந்தென்பழனி
யாத்தவிடமுண்டுபுவி யண்டமெல்லாங்-காத்தசிவ
சம்புசுதனீகொடுமை சாதிக்கலாகாது
நம்புமெனையாள்வாய் நயந்து. எஅ

நயந்துயர்தோன்றுதமன ஞானிகளுமெய்தி
வியந்துபரவும்பழனி வேந்தே-பயந்துசதா
வாடுவனோநோயான் மருந்துமருந்தென் றுசும்மா
தேடுவனோதேற்றுதி வந்தே. எகூ

தேவரிடர்கிரன் சிறைநீக்கினையொருபெண்
கூவவெதிர்வந்தனைசெங் கோல்வழுதி-தாவகர
முன்பகலச்செய்காய் முதல்பழனிக்குகவென்
னன்பமிதைத்திர்ப்ப தரிதோ. அ0

தோற்றியருணகிரிதுன்பந்தனைத்துடைத்தாய்
தேற்றியயனைச் சிறைவிடுத்தாய்-யேற்றிமுனம்
பொய்யாமொழிப்புலவன் போற்றவந்தாய்தென்பழனி
யையாவென்பாலேனடம். அக

அடங்கவில்லையாங்கார மாறவில்லைகோப
மடங்கவில்லைமாச்சரிய வன்மை-தொடங்கவில்லை
சித்தந்தம்பழனிச் செல்வவினிநானுய்வ
தெந்தந்திரங்கொண்டிருந்து. அக

இருந்துறவோபூணவறி வில்லைநல்லோர்பாலுந்
திறந்துறவோகோசிறிதுஞ் செய்யேன்-வருந்துறவோ
வீணேபிறப்பித்தாய் மெய்ப்பழனியப்பவென்னைப்
பேணேதனியேபிணி. அங

பிணியழிழ்செந்தாமறையும் பிந்துணதுபாதப்
பணிதழுவும்பத்தி பழுத்துத்-துணியுமனத்
தந்தாதரிஞான தண்டாயுதாபழனி
கந்தாகருணாகரா. அச

கராமடுவிற்பற்றக் கலங்குங்கயற்பால்
விராவுதுயர்க்குள்ளாய் மெலிந்தேன்-குராவடிவே
லப்பாபழனிக் கதிபாகரையேற்றித்
தப்பாதருளுனதுதாள். அரு

தாளமதங்கந் தழங்குபழனிக்கருணை
யாளமதங்கொண் டலங்கேதனை-நீல
வருத்துவதுநீதியென்று வாழ்த்தன்பினரு
டிருத்துவதுதானே யிதம். ௮௬

இதனாலிதுவிளையு மென்வறியேனுக்குன்
பதசேவைநல்கும் படாதோ-முதலான
னீயென்னசெய்தாலு நின்பெருமைதென்பழனித்
தாயன்னஞானோதயா. ௮௭

தயாநிதிநீயென்பதுதான் சத்தியமேயானால்
வியாதியினாலென்னை மெலிவிக்கை-நியாயமதோ
சொல்லாய்விரைவிற் சுகந்தரல்வேண்டும்பழனி
வல்லாய்தகாதுகண் கை. ௮௮

மையற்குள்வீழாது வன்பிணிதோன்றுதுமருண்
டையைக்கனாவி லழுந்தாது-நையங்க
மில்லாதுணைமறவா தெங்கள்பழனிக்குப்போய்
கல்லாதுறவருளாக்கம். ௮௯

கம்பித்தமாவிமனங் காட்சிபொருந்தித்திருத்த
வெம்பித்தமேமுதனோம் விட்டேக-நம்பித்து
பத்தர்புகழ்தென்பழனிப் பாலதண்டபாணியெனு
முத்தவருள்செய்தளரா முன். ௯௰

முன்னேமகிமைபல மூடருள்காணச்செலுத்திப்
பின்னேதிருவுளமேன் பேதித்தாய்-நின்னேர்மை
யாரறிவார்தென்பழனி யாறுமுகதேசிகவென்
கோரவினைதீரவருள் கூர். ௯௧

கூறியவேலாபழனி கோலாகலசீலா
வாரியமாலாமெய்க் கனுகூலா-காரியநா
னென்றுமறியேன்வழக்க ளுள்ளனவெல்லாந்திருத்தி
கன்றுதுதியென்றுறுதிநல்கு. ௯௨

நல்குரவும்வல்வினையு நையவருள்செய்யளிகள்
புல்குரவும்வெட்சியும்பைப் பூங்கடம்பு-மல்குரவுத்
துங்காபழனிச் சுகாதெய்வயானைவள்ளி
பங்காவளர்சிற்பரா. ௯௩

பராபரமாயல்லாப்பகலாப்புவன
சராசரமாய்மேலாய்த்தனியாய்-நிராமயமா
யுற்றநீயொன்றுமுணரார்மேபூன்றாப்பழனிக்
கொற்றவாநிறகிதொழுங்கோ. ௯௪

கோபமுண்டானோர்பாற்குணமுண்டெனுமுலக
நீபரிந்தாயாளாநிலையையென்ன-காபமெனறோ
வெத்தனையென்றோதுவன்யானெங்குமிலகும
வித்தகநின்பார்வையென் மேல். ௯௫

மேலறியேன்கீழறியேன்மெய்யறியேன்பொய்யறியேன்
மாலறியேன்போதவழியறியே-னூலறியே
னுன்னையறிவதெவ்வாறோங்குபழனிக்குகவென்
முன்னைவினையைமுனி. ௯௬

முனிவரதவாவைமுடிக்கும்பழனித்
தனிவரதவாவைதயவு-கனிவரத
னத்தங்கமயனகைபுனைநின்றாளிலென்னுள்
ளொத்தங்கமயவுடன். ௯௭

உடலுளநோயுமுள்ளத்துட்சஞ்சலமுங்
கடலிலெழுசெங்கதிரைக்கண்ட-மிடலிருள்போ
லின்னவிட்டேகவருளிங்குபசாரம்பழனி
மன்னேநீர்கென்னமொழிவல். ௯௮

வலலேயருட்சுரந்துவந்துவகையேதேனுஞ்
சொல்லேசொலியிட்டுயர்தணியே-நில்லேயென்
சித்தமிசைத்தென்பழனித் தேவசேனாதிபதியா
முத்தமநிற்கென்னகுறையும். ௯௯

உம்பரிடர்தீர்த்தெனையென் றுண்மையாகத்தெரிந்தா
லிம்பயரும்பழனியெம்மானே-வம்பவருஞ்
சீருலவாநின்பிறதெய்வந்தொழுதுவணங்
காருணையேசேர்வர்மயங்கார். ௱

வாழி.

மின்பரவுகார்வாழி விண்வாழி மண்வாழி
யன்பர்குலம்வாழி யருள்வாழி தென்பழநி
வாமிதமிழ் வாழிகுகன் வாழிகன்னி மார்வாழி
வாழியயில்வாழி மயில்.

பழனிவெண்பா வந்தாதி

முற்றிற்று.

உ

மதுராபுரி

மீனாட்சியம்மன்பேரிற் கீர்த்தனங்கள்.

அந்தலோனே-தெல்லவாரே

என்றஜாவளியின் மெட்டு.

க-இராகம்பியாக்தாளம்-ரூபகம்.

பல்லவி.

சொக்கநாதர் பக்கமேவுஞ்
சூட்சியேமீனாட்சியே

அநுபல்லவி.

திக்குவிஜையசக்கத்தரசு தீதியேதிரிசூலியே
பக்குவஜனகாதிமுனிவர் பரவுங்கபாலியே-சொக்க
ஜென்மதுரிதகன்மமகல சிறிதுகடைக்கண்பாரம்மா
வன்மநினைவதென்னவுனது மகிமையறிவாராரம்மா-சொக்க
மோகனவினையனேகமதனின் மூழ்குவதுவிரோதமே
தாகவருமைசகிக்கொணுது தஞ்சமெனக்குன்பாதமே-சொக்க
வதித்தனைபராமுகமன திளகவில்லையோவின்னமே
மாதுத்பகவிழாம்பழமிக வாழ்த்துமதுரையன்னமே-சொக்க

உ-இராகம்-பீல்-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னமென்மீதில்வர்ம-மென்னசொல்லம்மா
இனிநீயல்லதுபுக-லில்லைசும்மா

அநுபல்லவி.

வன்னவிலாச-வுன்னதவாச
மதுராபுரகதம்-பவனமானே
தென்னகர்குலம்பொற்புஜ-னென்னுமலையத்வஜ
சிமான்வரத்துதித்த-தெளிதேனே இன்ன
வஞ்சனையேதா-நெஞ்சிளகாதோ
வருத்துதுனக்குச்-சம்மதிதானோ

அஞ்சியுனதடிமை யுஞ்சிறியகுடிமை
யாகியபேய்பிடித்தலேவேனோ இன்ன

இகபரலோக-சுகமுமனேக
இன்பமுநீதருவா-யெனவுன்னை
பகலுமிரவும்போற்றி மிகவுநம்பினேன்தேற்றி
பரிபாலிப்பாயிஷ்டப்-படியென்னை இன்ன

மதுரவனந்த-விதபிரபந்த
மாம்பழந்தியானிக்கு மலேமாதே
சதுர்மறைபுகழ்-மதிவதனமீனாட்சித்
தாயேதயவுசெய்யச்-சலியாதே இன்ன

௩-இராகம்-மோஹனகல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

தாயேயென்னைரட்சிப்பாயே-நல்ல
சமயம்சர்வலோகதயாபரிநீயே

அநுபல்லவி.

மாயோன்முதலோர்போற்ற-வளர்சிவதாட்சி
வடிவமாகியமஹா-மதுரைமீனாட்சி தாயே

சிறிதும்பராமுகஞ்செய்யாதேயம்மா
வெறிகொண்டுவீணில்நா-னலேவேனோசும்மா தாயே

பிள்ளைபிழைபொறுத்தல் பெற்றவள்குணமே..
சள்ளையிதெனமனஞ்-சலியாதிக்ஷணமே தாயே

விதிக்குஞ்சாஸ்திரபுராண-வேதங்கள்யாவுந்
துதிக்குங்கடம்பவன-சுந்தரமேவும் தாயே

கலேகற்றவர்சட்கொரு-கற்பகம்போன்ற
மலேயத்வஜபாண்டியஸ்ரீ-மானினிதீன்ற தாயே

செந்தமிழ்மாம்பழந் தியானிக்குங்கனியே
மந்தரசுபாஷித வரதராதனியே தாயே

இராகம்-செஞ்சுருட்டி-திரிபுடை

பல்லவி.

அம்மம்மாமீனாட்சி-யருளம்மம்மா

அநுபல்லவி.

சும்மாவசட்டைசெய்யாதே
சோர்ந்தமாயிப்போதே அம்மம்மா

சரணங்கள்.

உற்றபுண்ணியபாவங்களொன்றுமறியேனே
குற்றமெனையும்பொறுத்துக்-கொண்டுமிகத்தானே அம்மம்

பாதகப்பிள்ளையைக்கூடப்-பாதுகாப்பதன்னை
யாதலிற்கைவிட்டிடாம-லாளவேணுமென்னை அம்மம்

சித்தமோர்சிறிதேனுந் திரும்பினலாகாதோ
சுத்தமாயிரக்கமில்லாச்-சூதுகற்றதேதோ அம்மம்மா

ராஜராஜேஸ்வரியென்று-நம்பினேனுன்பாதம்
மோசம்நினைக்கின்றது-முறையல்லவநீதம் அம்மம்மா

மாம்பழம்புகழ்மதுரை வாழும்பசுபொன்னே
சாம்பசிவசோமசுந்-தார்மருவுமின்னே அம்மம்மா

நாஜிகஜிய்யாரீ-பதாதி
என்ற இந்துஸ்தான் மெட்டு.
இராகம்-செருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மீனலோசனையே-வந்தெனது
வினைதவிர்ப்பாயே மீனலோ

அநுபல்லவி.

வானவர்சூழும்-மதுரையில்வாழும் மீனலோ
பாராமுகமேனோ-பகைசரிதானோ மீனலோ
சராசரமெங்குந்-தழைத்தருள்பொங்கும் மீனலோ
மாமலைமானே-மனதுநொந்தேனே மீனலோ
இங்கிதசுந்த-ரேசர்க்குகந்த மீனலோ
மங்களமிணங்கு-மாம்பழம்மணங்கும் மீனலோ

ஓரமணீ மனுசாமீனித்யாவே
என்றஜாவளியின்மெட்டு.
இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மதுராபுரபார்வதிபாதம்
பார்வதிபாதம்-நேர்வதுபோதம்

அநுபல்லவி.

கோமளவாணி பூமலர்வேணி
க்ஷேமபுராணி நேமகல்யாணி மாமது
யோகபுராரி பாகசரீரி
நாககுமாரி யேகவுதாரி மாமது
பக்தியும்வாக்கும் புத்தியுந்தேக்குஞ்
சித்தியுண்டாக்கும் நித்தியங்கேக்கும் மாமது.
வேமப்பிமான பூம்பரைகா
மாம்பழத்யான சாம்பவியான மாமது

கெடிகெடியகுஜாலமா
என்ற ஜாவளியின்மெட்டு.
இ-ம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

வரவரமனவர்மமா

அநுபல்லவி.

மாமதுராபுரிக்கரசி வரவர

சரணங்கள்.

பரமகல்யாணி பரிமளவேணி
பன்னகாபரணி பரிபூரணி வரவர
இரக்கமிராதா இவ்வளவுசூதா
இதுவோதருமம் என்னசெய்குவேன் வரவர
கதியினிநீயே காப்பாற்றுவாயே
கனிமாம்பழஞ்சொல் கருணாகரியே வரவர

இதுவுமந்த வர்னமெட்டு.

பல்லவி.

ஜயஜயஜெகதீஸ்வரி ; ஜயஜய

அநுபல்லவி.

ஸ்ரீமதுரா தினசுந்தரி . ஜய

சரணங்கள்.

நயதிவ்யகுணசின் மயசுபமீன
பனும்பிகைபன் னகபூஷணி ஜய

நிஜசுகமலையத் வசகுமாரி
நித்தியோச்சவசந் நிதிநாயகி ஜயஜய

விமலப்ராணி கமலசர்வாணி
மிகமாம்பழஞ்சே வித்தாயகி ஜயஜய

சின்னதானரா-நே

என்றஜாவளியின்மெட்டு

இ-ம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நம்பினேனம்மா நானம்பினேனம்மா

அநுபல்லவி.

அம்பிகையே-தென்மதுரை
அங்கையர்கண்ணன்னமே நாந

சரணங்கள்.

வாக்கினிமையாக்கிமுன்னை-வல்வினையான்றொல்லைதன்னை
நீக்கியிந்தநேமமென்னை-நீரட்சியென்றேயுன்னை நாந

எத்தனையோதுன்பநிதம்-ஏழையுய்வதெந்தவிதஞ்
சித்தமதுவேசம்மதந்-தேவியுனதுபதம் நாந

அரனரவெனவேயதி-யன்புடன்மாம்பழந்துதி
பரமசிவகருணாநிதி-பாலுமைநீயேகதி நாந

நோட்டு-இராகம்-பங்காளா-தாளம்-ஆதி.

பல்லவி.

நின்பொற்பாதம்பத்தியினோடு
நினையக்கிருபைபுரிநீதாயே
நினையக்கிருபைபுரிநீதாயே நின்பொ

அநுபல்லவி.

மென்பத்மாசன-விமலைமகா
வேதபுராதனஜயவீரி
மேலவர்சூழ்மதுராபுரிவாழ்
மீனவிலோசனகவுமாரி

மிஞ்சுஞ்செம் சஞ்சுங்கண்
டஞ்சுள்ளுசனை தந்தங்கியதரு-நின்பொ

சரணங்கள்.

சகலசராசரமருபூரணாங்-தரிசுந்தரபரசிவகாமி
சங்கரிபாலாம்பிகைபலசாட்சரிஜகன்மோகனபிரமி
காமளவத்புததவமித்ரி-மாமலையத்வஜவரபுத்ரி

சந்த்ரன்கண் டன்கண்பொங்
கிந்த்ரன்பண் தின்புங்கவர்தொழி நின்பொ

மணிமயகுண்டலகேயூர-மகுடாலங்க்ருதசுகவாணி
மகிடாசுரமர்த்தினசிம்ம-வாகினிமதுராமிர்தவேணி
மந்திரபிரணவகுணசீலி-தந்திரகனதளதிரிசூலி

வண்டுங்கொங் கும்பஞ்சுங்
கெண்டும்பின் துங்குங்குமுதென

மங்களதுங்ககதம்பவனே-ஸ்வரிமாதங்கியுமாதேவி
மாம்பழக்கவிநாவலன்-மனதகலாதனுதினமேவி
மகிமைவிளைத்தருள்சுயஜோதி-சுகிர்தசுலட்சணவனுபூதி

வஞ்சம்பங் கங்கெஞ்சம்
பஞ்சந்துன் பங்குன்றிடவொளிர்-நின்

இ-ம்-சங்கராபரணம்-அட.தாளசாப்பு

பல்லவி.

இன்னமென்கொடுமை யென்னம்மா

அநுபல்லவி.

தன்மதயாபுரி தென்மதுராபுரி
நின்மலகவுரி என்னம்மா இன்ன

சரணங்கள்.

மானதபூசனே தானருள்வாசனே
மீனலோசனே நீயென்னம்மா இன்

ஸ்ரீஜகன்மாதாவென் றேஜனர்யாவரும்பணி
ராசராசேஸ் வரியென்னம்மா இன்

முத்தமியெனே நித்தமுமேபுகழ்
உத்தமியேனே யாளென்னம்மா இன்

இ-ம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதரியெனையனுமம்பிகைநின்
பாதமேநாநம்பினேன்

அநுபல்லவி.

ஸ்ரீநகேசாதரி திவ்வியசடாதரி
மாதவர்சூழ்மதுராபுரிவாழ் நீதகுணதாமோதரி ஆதரி

மானசவுந்தரி மகுடதுரந்தரி
ஞானதயாநிதிசேரந்தரி கானரசஸ்ரீகந்தரி-அம்பா ஆதரி

மங்களநாரணி மலினநிவாரணி
பொங்கபரியாசனசம்பூரணி சங்கரிஜகத்காரணி-அம்பா ஆதரி

சத்யமனோகரி தளஜனசேகரி
நித்யமுமாம்பழநேர்வனதரு துத்யகனகிருபாகரி ஆதரி

கீதாமிர்தசாரம்

முற்றிற்று.

சென்னை-600 008.
143235